தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்.

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா | [illegible] | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6.

மலர் 2 | சென்னை | 10—4—56 | செவ்வாய்க்கிழமை | இதழ் 43

"யானை இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்" என்பது பழமொழி. விலங்குகளிலேயே அந்த அளவுக்கு மதிப்புள்ள யானைகளுக்கு வரலாற்றிலே தனி இடம் உண்டு. பழங்காலத்தில், அரசாள ஆளின்றித் தவிக்கும் நாட்டில் யானைகளால் வரலாறு எவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்கும் சுவையான கட்டுரை இது.

வரலாற்றில் யானைகள்!

குதிரையைத் தவிர மற்ற மிருகங்களுக்குள் யானையே இந்திய சரித்திரத்தில் அதிக இடம் பெற்றிருக்கிறது. நன்றாய்ப் பழக்கிய யானை யுத்த களத்தில் குதிரையைப் போல உதவும். அரசர்கள் வீதியில் பவனி வரும்போதும் தர்பார் மண்டபத்துக்கு வரும்போதும் யானைமேல்தான் கம்பீரமாய் வீற்றிருப்பார்கள்.

வேத காலத்திலிருந்தே இந்தியாவில் யானைகள் மிகவும் முக்கியமாக இருந்து வந்திருக்கின்றன. பட்டத்துக்கு ஏற்ற அரசனைத் தேர்ந்தெடுக்கும் சக்தி யானைக்கு உண்டு என்று அந்தக் காலத்தவர் மதித்தார்கள். குழந்தை இல்லாமல் அரசன் இறந்துவிட்டாலும் சரி, பட்டத்து இளவரசனை யாராவது கண்காணாமல் தூக்கிக்கொண்டு போய் விட்டாலும் சரி, பட்டத்து யானையைக் கொண்டுதான் புதிய அரசனைத் தேர்ந்தெடுப்பார்கள். அதை அலங்கரித்து அதன் கையில் ஒரு பூமாலையைக் கொடுப்பார்கள்; பட்டத்துக்குரிய அரசனைத் தேர்ந்தெடுத்து வரும்படி அதை அனுப்பி விடுவார்கள். யானையும் காடு மேடு மலையெல்லாம் சுற்றி அலைந்து கடைசியில் எவனாவது ஒருவன் கழுத்தில் மாலையைப் போட்டுத் தூக்கிச் செல்லும். இதன் பயனாகச் சில சமயம் ஆண்டி அரசனாகிவிடுவான்!

புராண காலத்தில் கங்கை நதிக் கரையில் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் ராஜதானியாக ஹஸ்தினாபுரம் (யானையூர்) என்ற ஒரு பட்டணமே இருந்தது. ஆயுத பாணிகளான வீரர்களை யுத்த களத்துக்கு யானைகள் தாங்கிச் செல்வதுபோல் இடைக்காலத்துக் கையெழுத்துப் பிரதிகளில் படங்கள் வரைந்து வைப்பார்கள். மொகலாயர்கள் கட்டிய டில்லிக் கோட்டையின் வாசலில் கல்லில் செதுக்கிய இரண்டு பெரிய யானைகள் இருந்தன; அவைகளின் மேல் ஜய மல்லன், பட்டா என்ற இரண்டு வீரர்களின் சிலைகள் அமர்ந்திருந்தன. தம்மால் வர்ணிக்க முடியாத கம்பீரக் காட்சியாக இருந்தது இது என்று பெர்னியர் என்பவர் குறிப்பிடுகிறார்.

சாதாரண மனிதனைச் சிங்காதனத்தில் ஏற்றிவைக்கும் சக்தியைப்போலவே, யுத்த களத்தில் முடிமன்னர்களைக் கவிழ்க்கும் இயல்பையும் யானைகள் பெற்றிருந்தன. புருஷோத்தமன் என்ற அரசன் அலெக்சாண்டருடன் போர் புரிந்து வெற்றியடைவதற்குத் தன் யானைப் படையையே பூரணமாக நம்பியிருந்தான். ஆனால் அலெக்சாண்டரின் வீரர்கள், புருஷோத்தமனின் யானைகள்மீது அம்புகளை எய்து, வாள்களால் அவைகளின் கால்களை வெட்டவே அவை பீதியடைந்து யுத்தகளத்தை விட்டு வெருண்டு ஓடிவிட்டன. அதனால் புருஷோத்தமன் தோல்வி அடைந்தான்.

கிறிஸ்துவுக்குப் பின் 712-ம் வருஷம் மீர் காசிம் என்பவனின் தலைமையில் அராபியர்கள் இந்தியாவைத் தாக்கியபோது, தாகிர் என்ற அரசனுக்கும் இந்தக் கதிதான் நேர்ந்தது. அராபியர்கள் தாகிரின் யானைகள்மீது கூர்மையான அம்புகளை எய்தார்கள். அதனால் உண்டான காயங்களின் வலியைப் பொறுக்க முடியாமல், அந்த யானைகள் நாலு பக்கமும் சிதறி ஓடின. அந்தக் குழப்பத்தில், தாகிரின் வீரர்களையே அவை தங்கள் கால்களால் மிதித்து நூற்றுக்கணக்கில் கொன்றுவிட்டன. தாகிர் தோல்வியுற்றான். இதற்குப் பிறகுதான் முஸ்லிம்கள் சிந்து தேசத்தைப் பிடிப்பதற்கு வழி ஏற்பட்டது.

பானிப்பட்டில் நடந்த இரண்டாவது யுத்தத்தின்போது, உஸ்பெக் கான் ஜமான் என்பவனின் தலைமையில் போர்புரிந்த மொகல் சேனையை ஹேமு என்ற ஹிந்து அரசன் முறியடித்து வெற்றியுடன் முன்னேறிச் சென்றான். அப்போது அவன் கண்ணில் ஓர் அம்பு வந்து குத்தியது. அவன் ஏறியிருந்த யானை இதைக் கண்டு பயத்தினால் வெருண்டு யுத்த அரங்கத்திலிருந்து ஓட்டம் எடுத்தது. இதனால் அவனுடைய சேனை கலைந்து நாலு பக்கமும் சிதறிப் போயிற்று. ஓடிப் போன யானையைப் பிடித்துவிட்டார்கள். அதன்மீது பிரக்ஞை இல்லாமல் கிடந்த ஹேமுவை அக்பரின் முன் கொண்டுபோனார்கள். மரணத்தறுவாயிலிருந்த அந்த அரசன்மேல் அக்பர் தம் கத்தியை வீசிக் கொன்றுவிட்டார்.

தலிகோடாவில் நடந்த சண்டையின் ஆரம்பத்தில், இந்துக்கள் அடைந்த வெற்றியை முடிவில் தோல்வியாக மாற்றியதும் யானைதான். கோல்கொண்டா, பிஜப்பூர் முஸ்லிம் சேனைத் தலைவர்கள் கடுமையான யுத்தம் நடத்திய பின்பு தளர்ந்து போய் யுத்த களத்தை விட்டுச் செல்ல எண்ணினார்கள். ஆனால், ஆமத்நகர் சுல்தான் ஹுசேன் நைஜாம் ஷா என்பவன் தைரியமாக விஜயநகரத்துக் கிழ அரசன் ராம ராஜாவை எதிர்த்து நின்றான். வெறிபிடித்த யானை ஒன்று அப்போது அந்த மன்னன் வீற்றிருந்த பல்லக்கை நோக்கிப் பாய்ந்து வந்தது. பல்லக்கைச் சுமந்து நின்ற ஆட்கள் அந்த யானையைக் கண்டு பயந்து போய் அரசனைக் கீழே போட்டுவிட்டார்கள். உடனே முஸ்லிம் சேனை அவனைப் பிடித்துக் கொண்டுவிட்டது. ஹுசேன் நைஜாம் ஷா ராம ராஜாவை அந்தக் கணமே கொன்றுவிட்டான். இரண்டு நூற்றுண்டுகளாக வாழ்ந்த விஜயநகர சாம்ராஜ்யத்தை ஒரு யானை இப்படி ஒரே நொடியில் அழித்துவிட்டது. இதற்குப் பிறகே தட்சிண தேசத்திலும் இஸ்லாம் மதத்தின் ஆதிக்கம் பரவியது.

ராஜபுத்திரர்களுடைய சரித்திரத்திலும் முதலில் அவர்கள் அடைந்த பல வெற்றிகள் முடிவில் தோல்விகளாக மாறியதற்கு மதம் பிடித்த யானைகளே காரணமாயிருந்தன என்று தெரிகிறது. ஆயினும் இயற்கையாக மதம் பிடித்த ஒரு யானை, தன்னிடம் பட்சமாயிருப்பவரிடம் சில சமயம் நன்றியோடு நடப்பதும் உண்டு. மதம் பிடித்த யானை ஒன்று ஒரு சமயம் புத்தியோடு நடந்துகொண்ட அதிசய வரலாறு ஒன்றைப் போர்ச்சுகீஸியர்கள் எழுதி வைத்திருக்கும் இந்து தேச சரித்திரத்தில் காணலாம். கோவாவில் ஒரு யானைக்குத் திடீரென்று வெறி பிடித்துவிட்டது. அது தன்னிடம் அகப்பட்டவர்களையெல்லாம் மிதித்துக் கொன்றுகொண்டே தெருவில் ஓடிற்று. அதற்கு அடிக்கடி பழமும் கறி காய்களும் அன்புடன் கொடுக்கும் ஒரு ஸ்திரியின் குழந்தை அப்போது தெருவில் கிடந்தது. அதைக் கண்டதும் அந்த யானை சட்டென்று நின்று தன் துதிக்கையால் குழந்தையை நாசூக்காய்த் தூக்கி ஒரு கடை வாசலில் இருந்த பலகையின் மேல் கொண்டுபோய் வைத்ததாம். 'ஐயோ! குழந்தை போய்விட்டதே!' என்று அலறிக்கொண்டிருந்த தாயிடம் குழந்தை இவ்விதம் பத்திரமாய்த் திரும்பிப் போய்ச் சேர்ந்தது. இதை லின்ஸ்சோடன் என்பவர் விவரமாய் எழுதியிருக்கிறார்.

மொகலாயர் காலத்தில் சண்டை, சமாதானம் ஆகிய இரண்டு காலங்களிலும் யானைகள் பலவிதமான சேவைகள் புரிந்திருக்கின்றன. அந்தக் காலத்தில் உயரமான யானை ஒன்றின்மீது எல்லார் கண்களிலும் படும்படி சேனைத் தலைவன் வீற்றிருப்பான். அவனைப் பார்த்துப் பார்த்துத்தான் சேனை உற்சாகம் கொள்ளும். யுத்தத்தின்போது கையாளும் ஓர் உபாயம் இது. இதைச் சரிவரக் கையாளாமல் போனதாலேயே அநேகம் மன்னர்கள் தோற்றுப் போயிருக்கிறார்கள். யானையை விட்டுக் கீழே இறங்கிய காரணத்தினால்தான் தாரா என்பவன் அபஜயம் அடைந்தான். ஆனால் அவனுடைய சகோதரனான அவுரங்கஜேபு அடைந்த வெற்றிக்கும் யானைதான் காரணம். ராஜ்யத்துக்காக நடந்த சண்டையில் ஒரு சமயம் தோல்வி ஏற்படும்போல் இருந்தது. அப்போது யுத்த களத்திலிருந்து ஓடமுடியாதபடி யானையின் கால்களைச் சங்கிலியால் கட்டிவிடும்படி அவுரங்கஜேபு உத்தரவிட்டான். அவனிடமிருந்த சிறு சேனை இழந்த தைரியத்தை மீண்டும் பெற்றுச் சண்டையிட இதுவே ஏதுவாயிற்று. இதனால் சண்டையின் வெற்றிக்கும் தோல்விக்கும் யானையே முக்கிய காரணமாக இருந்திருக்கிறது என்று நாம் தெரிந்துகொள்ளலாம்.

அக்பர் சக்கரவர்த்திக்கு யானை என்றால் மிகவும் பிரியம். சண்டையில் அவை அவருக்குப் பெரிதும் உபயோகமாக இருந்தன. யானைப் படையாகவே ஒன்று அவர் வைத்திருந்தார். தம் சொந்தத்தில் அவர் உபயோகித்த யானைகளுக்கு 'காஸா' (பிரத்தியேகம்) என்று பெயர். பத்து, இருபது, முப்பது என்று அணிவகுத்து வைத்திருக்கும் மற்ற யானைகளுக்கு 'ஹால்கா' (கோஷ்டி) என்று பெயர். குதிரைகளையும் பொதிசுமக்கும் மற்ற விலங்குகளையும் பழக்குவதோடு சில யானைகளையும் பழக்கும்படி தம் கீழுள்ள மன்ஸப்தார்கள் என்ற படைத் தலைவர்களுக்கெல்லாம் அக்பர் உத்தரவிட்டிருந்தாராம். தாம் எழுதிய 'ஆயின்-இ-அக்பரி' என்ற நூலில் இதை அபுல் பஸல் குறிப்பிட்டிருக்கிறார்.

ஜான் ஜோர்டேன் என்ற ஆங்கிலேயர் 1611-ம் ஆண்டு ஆக்ராவுக்கு வந்திருந்தார். அப்போது ஜஹாங்கீர் சக்கரவர்த்தியாக இருந்தான். அவனுடைய காவல் படைகளில் ஒன்று யானைப்படை. அந்த யானைகள் தினந்தோறும் அவனைக் காணும்போது தங்கள் துதிக்கைகளை உயரத் தூக்கிச் சலாம் செய்யும்படி பழக்கியிருந்தார்களாம். இதை ஜான் ஜோர்டேன் தம் யாத்திரை நூலில் எழுதிவைத்திருக்கிறார். அந்த யானைகளின் கழுத்தில் மணிகள் கோத்த சங்கிலி கட்டி, அவற்றின் உடம்பில் உயர்ந்த பட்டையும் வெல்வெட்டையும் போர்த்திருந்தார்களாம். அவைகளின் தலையையும் மார்பையும் சிவப்பு, பச்சை முதலிய ரத்தினங்கள் வைத்து இழைத்த தங்கத்தகடுகளால் அலங்கரித்து, அவைகளின் மேல் கொடிகளைப் பறக்கவிட்டிருந்தார்களாம். சக்கரவர்த்தியின் பிறந்த நாளன்று இந்த யானைகளில் ஒவ்வொன்றும் மன்னனுக்கு முன் வந்து மிகவும் பக்தியுடன் பணிந்துவிட்டுப் போகுமாம். இங்கிலாந்தில் உள்ள பாட்லியன் லைப்ரரியில் வைத்துப் பாதுகாத்திருக்கும் ஒரு கையெழுத்துப் பிரதியில், ஷா ஜஹானின் தர்பாருக்கு முன் இரண்டு யானைகள்மீது இரண்டு பேர் நின்றுகொண்டு செல்லுவது போன்ற படம் வரைந்திருக்கிறது.

போர்ச்சுகீஸியர் காலத்திலும் இதேபோல் கோவாவில் வருஷப் பிறப்பன்று யானைகளை அலங்கரித்து வைஸிராய், ஆர்ச்பிஷப், மற்றுமுள்ள பிரமுகர்கள் இவர்கள் எல்லாரையும் வணங்குவதற்கென்று ஊர்வலமாய் அழைத்துச் செல்லுவார்களாம். ஒவ்வொரு யானையின் மேலும் குழல் வாசித்துக்கொண்டு ஆறு ஆறு பேர் செல்லுவார்கள். மாதாகோவிலையும், பெரிய பிரபுக்களுடைய வீடுகளையும் தாண்டிச் செல்லும்போது அந்த யானைகள் குனிந்து வணக்கம் செலுத்திவிட்டுப் போகும்.

மொகலாயர் காலத்தில் தூர தேசப் பிரயாணங்களுக்கு யானைகளே உதவியாக இருந்திருக்கின்றன. ராஜகுமாரிகளும் அந்தப்புரத்துச் சீமாட்டிகளும் யானையின் மேல் அம்பாரியில் உட்கார்ந்தோ, அல்லது பெரிய வெள்ளி மணி கட்டிய இரண்டு யானைகளின் நடுவில் விலையுயர்ந்த பட்டுப் படுதா கட்டிய பல்லக்கில் அமர்ந்தோ பிரயாணம் செய்வார்கள். பெர்னியர் அதை வர்ணிப்பதைப் பாருங்கள்: "மலை போன்ற பெருதேசத்து யானையின்மேல் நவரத்தின கசிதமான அம்பாரியில் ரோஷனாரா பேகமும், அவளுக்குப் பின்னால் வேறு ஆறு யானைகளின்மேல் தகதகவென்று ஜொலிக்கும் அம்பாரிகளில் அவளுடைய பணிப்பெண்களும் உட்கார்ந்து செல்லும் காட்சியைக் காட்டிலும் அற்புதமான வேறொரு காட்சியை நம்மால் கற்பனையே செய்யமுடியாது. இந்த அழகிகள் யானைகளின்மேல் அவ்வளவு உயரத்தில் உட்கார்ந்து செல்லும்போது, இவர்கள் ஆகாய

— 10-ம் பக்கம் —

> "போற்றுபவர் போற்றட்டும் புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும் ; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதோரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன் ; அஞ்சேன் !"

எண்ணம்

மலர் 2 | 10-4-56 | இதழ் 43

"சுயஜாதி" மித்திரன் !

இந்தியாவில் காணப்படும் எல்லாச் சமுதாயக் கொடுமைகளுக்கும் முதற் காரணம் மதம்தான்.

—லாலா லஜபதி

மதம் பற்றி என்றும் போராடாதே. மதம் பற்றிய சண்டைகளும் வாதங்களும் யாவும் ஞானமின்மையையே புலப்படுத்துகிறது.

—விவேகானந்தர்

மதம் என்றால் குருட்டு நம்பிக்கை, வெறி, பிற்போக்கு, ஆராய்ச்சிக் கடங்காத கொள்கை, மூடபக்தி, சுரண்டல், பரம்பரைப் பாத்தியப் பாதுகாப்பு - என்று எனக்கு எப்போதுமே தோன்றும்.

—நேரு

மதம் மக்களைப் பாகுபடுத்தவும் பிறரிடத்தில் வெறுப்புக்காட்டவும் கற்பிக்கிறது.

—தாகூர்

இந்த எடுத்துக் காட்டுக்கள் எதற்காக ? இவைகளை ஒப்பிட்டுப் பார்த்து எது அதிதீவிரக் கருத்துக்கொண்டதாக இருக்கிறது என்று கேட்பதற்காக அல்ல. நாட்டவரின் செல்வாக்கைச் சம்பாதித்தவர்கள் மதத்தைப் பற்றி என்ன எண்ணியிருக்கிறார்கள் என்பதை வைதீக வெறி பிடித்துப்பேயாட்டம் போடும்'சுதேசமித்திரன்'களுக்கு உணர்த்தி, பேதலித்துக் கலங்கி நிற்கும் " அதுகளது " மூளைக்குழம்பைத் தெளிவுபடுத்துவதற்காகவே மேலே சில தலைவர்களின் கருத்துக்களைப் பிரசுரித்திருக்கிறோம்.

கோயில்களில், பயன்படாமல் முடங்கிக் கிடக்கும் செல்வத்தை பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள் போன்ற பொதுநிலையங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று சென்னை மந்திரி ஒருவர் அண்மையில் திருச்செந்தூரில் பேசிவிட்டார் என்பதற்காக 'சுதேசமித்திரன்' சீறி விழுந்திருக்கிறது. சினம் பெற்று விஷத்தைக் கக்கியிருக்கிறது. கோயில் சொத்தை நாட்டு மக்களின் நலனுக்குப்பயன்படுத்தக்கூடாது என்று வாதித்து தனக்கு இருதயமே இல்லையென்பதை மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது. தன்னுடைய குருட்டு வாதத்தின் வாயிலாக இருண்ட உள்ளம் கொண்டோர்தான் இந்து மதத்திற்குத் தேவை என்றும் விளம்பரப்படுத்திக் கொண்டிருக்கிறது. கேவலம் ! வளர்ந்து வரும் மனித சமுதாயத்தில் இவர்களும் அங்கம் வகிக்கிறார்கள். கோயில் பணம் இதுபோன்ற நல்ல காரியங்களுக்காக ஏற்பட்டதல்லவாம் ! எவ்வளவு நெஞ்சழுத்தம் ? ஆண்டவனுக்கும் தனக்கும் மாமன், மைத்துனன் உறவு முறை பாராட்டிக்கொள்ளும் சுதேசமித்திரனுக்கு இருக்கும் ஈகை இரக்கத்திற்கு ஏப்ரல் 2-ந் தேதிய தலையங்கம் சான்று பகர்கிறது !

" மற்ற மதஸ்தாபனங்களின் சொத்தை பொதுவாக எல்லா மக்களுக்கும் பயன்படும் காரியங்களில் ஈடுபடுத்துவது பற்றி இது வரை யாரும் யோசனை சொன்னதில்லை. ஏன் ? மற்ற மதங்கள் விஷயத்தில் மிகத் தெளிவாகத் தோன்றும் நியாயம், இந்துமதம் என்றால் மட்டும் ஏன் புலப்படுவதில்லை ?"-இது சுதேசமித்திரனின் வாதம். எதிரியின் கண்கள் தோண்டப்பட்டால் போதும் என் கண்கள் போவது பற்றி எனக்குக் கவலை இல்லை என்று வாதிக்கிறது 'சுயசாதி மித்திரன்,' மற்ற மதஸ்தாபனங்களின் சொத்து எதற்கும் செலவழிக்கப் படவில்லையாம். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்ற நெஞ்சொடிந்த கொள்கை வேதாந்த வரிகளாக்கப் பட்டு, அதன் பயனாய் எழுப்பப்பட்ட ஆயிரக்கணக்கான இந்துக்கோயில்கள் எங்கே ? அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கட்டப்பட்டிருக்கும் மசூதிகள், மாதா கோயில்கள் எங்கே ? வெள்ளிச்செருப்பிலிருந்து பொன்னாலான கூரை வரை அள்ளி விழுங்கிக்கொண்டிருக்கும் எண்ணற்ற 'பாவக்கிடங்குகளின்' மலையளவு சொத்தை, உப்புப் பொறியும், ஒழுகும் மெழுகுவர்த்தியும் காணிக்கை பெற்றுக்கொண்டிருக்கும் தேவாலயங்களின் சொத்தோடும் ஈடுகாட்டி எழுதியிருக்கிறது ! பேதமை ! பேதமை ! பேதமை !!

மசூதிகளும், மாதாகோயில்களும் சேர்த்து, இந்துக் கோயில்களின் மொத்த எண்ணிக்கையில் ஆயிரத்தில் ஒரு பங்கு என்று வைத்துக்கொண்டாலும், தென்னாடெங்கணும் புகழ் விளக்குகளாக ஒளிவிட்டிருக்கும் அறிவாலயங்கள் கல்லூரிகள்-பள்ளிக்கூடங்கள் எந்த மதச் சொத்துக்களால் இயங்கி வருகின்றன என்பதை மித்திரன் எண்ணிப் பார்க்காததிலிருந்து அதனுடை இதய நேத்திரம் பழுதுபட்டது என்பது தெளிவாகிறது.

இந்துக்கோயில்களின் சொத்து இப்படிப்பட்ட காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டால், அந்தச் சொத்துக்களைத் தானம் செய்தவர்களின் நோக்கம் கெடுகிறதாம் ! நஞ்சைப் பாய்ச்சி நாட்டைக் கெடுத்து, எஞ்சியுள்ள இனப் பற்றுக்கும் வெடிவைக்கத் துடித்து நிற்கும் அய்யங்கார் பத்திரிகை தார்மீகம் பேசுகிறது. கன்னமிட்டவனும், கள்ளக் கையொப்பமிட்டவனும், கொள்ளையடித்தவனும், கொலைபல புரிந்தவனும் என்ன நோக்கத்தோடு தானம் செய்கிறார்கள்? "இன்னும் எங்கள் வசம் ஏராளமான கொலைத் திட்டங்கள், கொள்ளைத் திட்டங்கள் இருக்கின்றன; அவைகளுக்கும் நாங்கள் தப்பிக்கவேண்டும் என்பதற்காகவே இந்தப் பாதகாணிக்கை!" என்று கொடுக்கும் 'இரவு நேரத் தர்மகர்த்தா'க்களின் நோக்கம் கெட்டுவிடுகிறதாம் ! மித்திரன் வாதத்தின் உட்பொருள் யோக்கியதை இது ! கோயில் சொத்து சமுதாய மறுமலர்ச்சிக்குப் பயன்பட்டால் கொலைகாரர்களின் நோக்கம் பாழ்பட்டுவிடுமாம் ! ஆகவே, கோயில் சொத்துக்களை எடுத்துச் செலவு செய்வது நம்பிக்கை மோசமாம் ! அண்டிப்பிழைத்து அரசர்களைத் தோண்டிப் புதைத்தவர்கள் நமக்கு அறநெறி போதிக்கிறார்கள். தித்திக்கும் தேன் சுனையில் கெந்தகத்தைக் கலக்கிவிட்டு, தத்தி விளையாடும் கிளிக்குஞ்சுகளை மிதக்கவிட்டவர்கள் 'இது தர்மந்தானோ ? என்று நல்லுறை பகர்கிறார்கள். அத்தனையும் மதப்பித்து ! மிகுந்திருக்கும் சூதற்ற மக்களை மிதித்துத் துவைக்கும் வெறிக்குணம்!!

கண்ணாடி விரியனின் தோல் மின்னலையும், நெருப்பின் அழகுச் சிவப்பையும் பெற்றிருக்கும் மித்திரனின் தலையங்கம் நம்மில் பலரையும் வசப்படுத்தியிருக்கக்கூடும். இந்துக்கோயிலின் சொத்து எதற்கும் பயன்படக்கூடாது என்று கதறியழும் மித்திரன், வேதபாடசாலைகளுக்கு மட்டும் பயன்படுத்தப்படும் கோயில் சொத்துக்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை என்பதை திராவிட பக்தர்கள் மறந்துவிடக்கூடாது. வேதபாடசாலைகளுக்குப் பயன்படும் கோயில் சொத்து, கல்லூரிகளுக்குப் பயன்படக்கூடாதா? காலொடிந்து, கையொடிந்து, கண் அவிந்து அவதிப்படும் மருத்துவ விடுதிகளுக்குப் பயன்படக்கூடாதா? அதற்குப் பயன்படாத ஆண்டவன் சொத்து எதற்கு ? அந்த ஆண்டவர்கள்தான் நமக்கு ஏன்? வேதபாடசாலைகளில் பயிலும் வேதியர்(சிறு) மக்கள்தான் இந்துக்கள் என்றால் திராவிட பக்தர்கள் ஏன் தங்களைச் சுரணையற்றுப் போய் இந்துக்கள் என்று அழைத்துக் கொள்ள வேண்டும்? இந்த இழிபெயர் குறிப்பிட்ட அவர்களுக்கே இருக்கட்டும் ! சுத்த வீரமும். சுயமரியாதையும் பெற்றிருக்கும் திராவிடர்கள் என்றென்றும் மனிதர்களாக வாழ்ந்து மடியட்டும்.

மதம் மதம் பிடித்தயர்களாலேயே பின்பற்றப்படட்டும்! அவர்கள், தங்கள் தலைவர்கள் என்று யாரைக் கருதிக்கொண்டிருக்கிறார்கள்? அந்தப் படித்த யோகி விவேகானந்தருக்கு, பலம் பெற்றிருந்த லஜபதிராய்க்கு, வடநாட்டுப் பெரியாராம் வங்கக்கவி தாகூருக்கு, அதிசய மனிதர் நேருவுக்கு 'சுயசாதி' மித்திரனின் தொண்டு களங்கம் பூசட்டும் !

அரசியல்

★ **மார்ச் 30 :** கோவில்களின் நிதிகளைப் பொதுக் காரியங்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும் அதற்கேற்றபடி அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்றும்ஸ்தல ஸ்தாபன மந்திரி ராமசாமிப் படையாச்சி திருச்செந்தூரில் குறிப்பிட்டார்.

★ சென்னைப் பல்கலைக் கழகத்தின் நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டில் கடைசி வாரத்தில் கொண்டாடப்பட இருக்கிறது என்ற தகவல் வெளியானது.

★ **மார்ச் 31 :** கவர்னர் பதவி ஒழிப்பு, சர்க்காரில் உயர்ந்த சம்பளங்களைக் குறைத்தல் இவற்றிற்காகப் போராட்டம் நடத்த தமிழ் நாடு சோஷலிஸ்ட் கட்சிக் கமிட்டி ஆதரவளிப்பதாக அண்மையில் எஸ். பி. ஆதித்தன் குறிப்பிட்டார்.

★ கணக்குகள் தணிக்கைக்குத் தனி இலாகா அமைக்க யோசிப்பதாக நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

★ நெய்வேலியில் பீங்கான் தொழிற்சாலை ஒன்றைச் சென்னை அரசாங்கம் தொடங்க இருக்கிறது.

★ அசாம் மாகாணத்தில் நாகர்கள் செய்யும் கலகங்களை அடக்கி ஒடுக்குவதற்குரிய முழுப்பொறுப்பையும் இந்திய இராணுவப்படை வீரர்கள் ஏற்றுக்கொள்வார்களாம்.

★ **ஏப்ரல் 2 :** இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ராஜ்யத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதாது. இதை மேலும் அதிகரிக்க நாம் வற்புறுத்த வேண்டும் என்று நிதியமைச்சர் கூறினார்.

★ **ஏப்ரல் 3 :** மேற்கு பாகிஸ்தான் அரசியல் நிலைமையில் புதுத் திருப்பம் ஏற்பட்டுள்ளது. சர்தார் பகதூர்கான் மேற்கு பாக். அசெம்பிளி முஸ்லீம் லீக் கட்சியின் தலைவராக ஏகமனதாக அக்கட்சியின் கூட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

★ நேத்தாஜி சுபாஷ் இப்போது சீனாவில் உயிரோடு இருப்பதாக திரு. முத்துராமலிங்கத் தேவர் மீண்டும் குறிப்பிட்டார்.

★ கெஜட் பதிவில்லாத அலுவலகர்களுக்குத் தனிப்பட்டவர்களின் மருத்துவ மனையிலும், நகர சபை மருத்துவ மனைகளிலும் இலவச வைத்திய வசதி அளிக்கப்படுமென்று ராஜ்ய சர்க்கார் புது உத்திரவு பிறப்பித்துள்ளது.

தீச்சுடர்

தோழர் சி. பி. சிற்றரசு அவர்களை ஆசிரியராகக் கொண்ட தீச்சுடர், தமிழ் வார வெளியீடு மே திங்கள் முதல் வாரத்திலிருந்து மேதினச்செய்திகளையும் கட்டுரைகளையும் ஏந்தி வெளி வருவதற்கான எல்லா ஏற்பாடுகளும் நடந்துக்கொண்டிருக்கின்றன. ஏஜெண்டு நண்பர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

ஆசிரியர் ; தீச்சுடர்,
31, தையப்ப முதலி தெரு,
சென்னை-1.

நீலப் புரு!

......'ஆகஸ்டு - பதினைந்திற்குப் பிறகு 'அவர்கள்' தயாரித்த 'தியாகிப் பட்டியலில்' அவன் பெயரைக் காண முடியாது - காரணம். காந்தி பக்தனாக இருந்தவன், தமிழ் தாசனாகிப் போனதுதான்; காந்தியார் நடத்திய ஒத்துழையாமை இயக்கத்திலும் அறப் போரிலும் பங்குகொண்ட அவன், பெற்ற பரிசு - தனது வலது காலை இழந்ததுதான். கால் இழந்த அவனுக்கு கோல் கொடுத்ததுகூட, காந்தியார் அல்ல - அந்த வெறிபிடித்த ஏகாதிபத்திய ஆங்கில ஆட்சியின் மருத்துவ மனையார் தான்; இவையெல்லாம்கூட அவன் மனதை - அதில் இருந்த கதராடையை - அவன் இதயத்தில் சுற்றிக்கொண்டிருந்த இராட்டினத்தை நிறுத்தியதில்லை— மாற்றியதுமில்லை.! மாறாக மறுமுறையும் காந்தியார் ஆணை எப்போது கிடைக்கும் என்ற முறையில்தான் கடைக்கால ஓய்வைக்கழிக்க அவனது பிறந்த ஊரான 'துரிஞ்சில் காட்டிற்குள் நுழைந்தான்.

'துரிஞ்சில் காடு' சிற்றூர். நடராசன் - அவனது பெயர்தான் - காந்தியாரின் படையிலே போர் வீரனாக அவன். மாறு முன் அவன் 'சோமநாதரின்' எடுபிடி. சோமநாதர் பெரும் புள்ளி. பணம் படைத்தவர், நாட்டாண்மைக்காரர் - மணியக்காரர்- மற்றும் பல அவரைப் பெரியவராக்கியது. நடராசனின் தாயும் தந்தையும் அங்கு உழைத்து இறந்த பிறகு அந்தப்பதவிக்கு -'இளவரசாக' இவன் இருந்தான். இடையிலேதான் காந்தியார், இவன் மனதைக் கவர அதில் பங்கு கொண்டான். சோமநாதர் புகைந்தார் - எரிந்து விழுந்தார் - புத்தி கூறினார், பின் முடிவாக 'போகட்டும் கழுதை—விட்டுத் தொலை உருப்படாதவன்' என்ற அளவோடு அவனை மறந்தார்.

அன்று அவன் அறப்போரில் பங்குகொண்ட போதும், பின் சிறை சென்றபோதும், எந்த 'துரிஞ்சில் காடு' கேலியாக பரிதாபமாகப் பேசியதோ அதே துரிஞ்சில் காடுதான் இன்று அவனைப் பாராட்டியதும்; அதுகூட அவனுக்கு விந்தையாகத் தெரியவில்லை,...சோமநாதர் தேசியவாதி உருவிலே அவனை வரவேற்ற போது, அவனுக்கு எழுந்த வியப்பு.!

இதனிடையில்தான் - அந்த ஊர் சேரிக்கு சோமநாதரின் பண்ணையாள் —'தோட்டி கருப்பனின்' மகள் 'அஞ்சுகம்' ஆசிரியைப் பயிற்சி முடித்த புது மெருகுடன் - வேலைக்கு வந்திருந்தாள்.

உள்ளூரிலேயே வேலைக்கு வர சோமநாதரின் செல்வாக்குப் பயன் பட்டது உண்மைதான்.

சேரியைத் திருத்தச் செல்லும் நடராசனுக்கும் ஆசிரியை அஞ்சுகத்திற்கும்...விழி உறவும் பின் உதட்டுறவும் - பின் உள்ளமும் - இறுதியாக உடலுமாக...இணைந்து-இருவர்—ஒருவர்ஆயினர். சோமநாதருக்கு சேதி தெரிந்தது; நடராசனின் முன்னய நடத்தை அவரின் நினைவிற்கு வந்தது. தன்னை மதிக்காத - தன்னை அவமதித்த அந்தச் செருக்கனை......! 'அவளை,......!!

'அந்த நீலப் புரு'...அவர் கண் முன் ஒரு கனம் தோன்றி மறைந்தாள் - உள்ளத்தில் ஏற்பட்ட கதகதப்பு, புதுப்புனல் ஒரு கணம் செல்ல அவர் புயலானார் - இதயம் புலிக் குகையானது. நடராசன் மீது பாய்ந்தது. ஊரைத் திரட்டினார். உன்மத்தன் செயல் பாரீர் என்றார் சேரி மகளை ஊர் மகன் மணப்பதா?.. கேலி செய்கிறான்; நம் முகத்தில் காரித் துப்புகிறான். - சொற்கள் வெடித்தன. அவன் அவளைத் திருமணம் வேறு செய்துகொள்ளப் போகிறானாமே ... அடுக்குமா...தெய்வத்திற்குப் பொறுக்குமா...!! துரிஞ்சிக்காடு—வீதியிலே அந்தத் 'துடுக்குகாரர்கள்' நடப்பதா? ஊரார் உள்ளத்தில் ஆத்திரம்.

இத்தனைக்கும் அவன் சிரித்தபடி இருந்தான். அவளும் துணிந்து ஒரு முடிவிற்கு வந்துவிட்டதைப் பார்வையில் காட்டினாள். மணம் நடந்தது - ஊரார் மிரண்டனர். அவனோ 'காந்தியார் இருந்தால் என்னை எத்தனை வாழ்த்துவார்' என்று எண்ணினான்.

சோமநாதர் விரல் அசைந்தது. அந்த ஜோடிப் புறாக்கள் ஊருக்குள் வாழக் கூடாது. சுற்றியுள்ள எந்த ஊருக்குள்ளும் வாழக் கூடாது. சேரிக்கே சென்றனர். சேரி வாசிகள் விரட்டினர் சோமநாதர் அங்கும் இருந்தார். இறுதியாக, வயலோரத்தில் சேரி பள்ளியை அடுத்த ஓர்இடத்தில் புதிய குடிசை ஒன்று தோன்றியது புது மணமக்கள்-குடி புகுந்தனர்...

ஊர் அவர்களை ஒதுக்கி வைத்தது. ஊர்க்கட்டுப்பாடு அவர்கள் வாழ்வைச் சிறை வாழ்வாக மாற்ற முனைந்தது.

இணைப்பறவைகள்—அந்தத் துணையற்ற பறவைகள் வாழத் தொடங்கின. சோமநாதர் உள்ளத்திலும் பொறாமையும் பேய் ஆசையும், வளர்ந்தபடி வாழ்ந்தது 'அஞ்சுகம்' பெரு மூச்சுக்கிடையே அடிக்கடி இந்தப் பெயரை நினைத்துக்கொள்வதுண்டு இவர். 'கொய்யாக் கனி' என்று நினைத்திருந்தார்.'தோட்டத்துத் தேங்காய், என்று அவளை எண்ணியிருந்தார். ஆனால் இன்று அவள் ஒரு 'இலவுக் கனி'...? எப்படியும்... அவளைச் சுவைப்பது, அதோடு அந்த 'மண்டை கர்வியையும்'...!—திட்டம் அவர் உள்ளத்தில் உருவானபடி இருந்தது; ஓரிரு மாதத்தில் அஞ்சுகத்தின் வேலை போனது; வறுமையிலும் — காதலுண்டு என்றார்கள் அந்த தோகை மயில்கள்... காலம் ஓடிக்கொண்டிருந்தது.

ஒருநாள் கொஞ்சிப் பேசிய நடராசனிடம்...'கொஞ்சம் பொறுத்திருங்கள்' என்றாள் அஞ்சுகம்;

'எதற்கென்றான்' — "குழந்தையிடம் கொஞ்சிப் பேச..." கூறிவிட்டு அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

'எப்போதென்றான் ...' 'ஏழுவிரல்களைக் காட்டினாள்.

'மாதங்கள் ஓடின. பத்தாவது மாதத் துவக்கத்தில் பக்கத்து நகரில் உள்ள மருத்துவ மனையில் அவளைச் சேர்த்துவிடுவது'—இது அவன் எண்ணியிருந்த திட்டம். ஆனால் ... ஓர் நாள்—ஒரு மாதம் இருக்கிறது. குழந்தை பிறக்க...அதற்குள் அவள்!

வலி எடுத்தது, ..பின் வழக்கமாக நடைபெறுவது நடக்கத்தொடங்கின. அவன் திகைத்தான். உதவிக்குயாரை அழைப்பேன் என்று துடித்தான ஊன்றுகோலைத் தாங்கி, ஊருக்குள் ஓடினான்; கெஞ்சினான் - காலைப் பிடித்து மன்றாடினான். பலன்? அஞ்சுகத்தின் தாயே வர முடியாதென்றால் யார் வருவார்கள்...?குடிசைக்கு வந்தான்—

பிணம்போல அவள்—சுற்றிலும்... தோய்ந்திருந்த செந்நீர்—முனகல் ஒலி— அந்தச் சூழ்நிலை...அவனை ஒருகணம் நாத்திகனாகக்கூட மாற்றியது. "யாருக்கோ...'தாயும் ஆனாராமே' அந்த மடையனுக்குக்கூடவா இதயமில்லை ? இங்கு ஏன் வரக் கூடாது"...

இறுதியிலே அவனே 'மருத்துவச்சி' ஆனான்...எனக்கு ஒருகால் தான் இல்லை—இரண்டு கைகளும் உண்டு.!—உரக்கக் கூவியிருப்பான் இப்படி...

மறுநாள் இரவு இவன் முயற்சியும் இயற்கையின் தன்மையுமாக சேர்ந்த ஒரு புதிய பிண்டத்தை - ஆமாம் பிணத்தை—உலகில் தள்ளியது...!

'அஞ்சுகம்' என்றான் — அவள் உறங்கிக் கொண்டிருந்தாள். ஆமாம் நீண்ட உறக்கம் - அவள் இறந்து போனாள் !...

"அஞ்சுகம்"... அவன் கதறினான்,. அந்தப்பிணத்தின்மீது விழுந்து புரண்டான்; இதயம் வெடித்துச் சிதறியது. அந்தக் கணமே அவன் வெறியனாகி விட்டான், பைத்தியக்காரனாகிவிட்டான், குருடனாகிவிட்டான், பயங்கர மிருகமாகிவிட்டான்; மூன்று நாட்கள் —அந்தப் பிணத்தின்மீதே விழுந்து கிடந்தான். அந்த நாற்றத்தில் புதைந்து கிடந்தான்; இருளில் சுற்றிப் பறந்த மின் மினியும்-பிணத்தை மொய்த்த எறும்புகளும் அவனுக்குச் சோமநாதரை நினைவூட்டியது.

★

துரிஞ்சில் காடு அன்று மகிழ்ச்சியில் துள்ளி ஆடியது. உதிர்ந்துவிழும் விண்மீன்போல, எரிந்து விழுந்த மத்தாப்பும் — வெடியும் ஓர் புறம்; பொய்க்கால் குதிரை—பூத உருவம் மற்றொரு புறம் பன்னீரும் - சந்தனமும் மணம் வீசி திருவாடுதுறையும்...திருவெண்காடும்...தென்றலாகி உலவியது எங்கும். இத்தனைக்கும் காரணம், சோமநாதரின் மகளுக்கு நடந்த திருமண ஊர்வலம். மண மக்கள், காரிலே—அன்னம் போல் அலங்கரித்த காரிலே—தீப ஒளி முன்னால் செல்ல, மெல்ல சென்று கொண்டிருந்தனர்....

சோமநாதர் புன்சிரிப்புத்தவழ முன்னால் சென்று கொண்டிருந்தார். திடீரென்று குழப்பம். விளக்கொன்று கீழே விழுந்தது; அடுத்த கணம்... 'ஆ—அம்மா'என்ற குரல் ; சுற்றியிருந்தவரின் குழப்ப ஓசைகள் - வீற்றிருந்த மணமகள் முகத்தில்... இரத்தக்கறை...'மணமகன்' குத்திக் கொல்லப்பட்டார்....

சோமநாதர் அலறி ஓடிவந்தார். ஓடிவந்த அவரை ஒரு உருவம் தடுத்துப் பிடித்தது. குலுக்கியது. 'பழிகாரா நெஞ்சம் குளிர்ந்ததா' 'எங்கே ஓடுகிறாய்'

'யாரவன்'...

விளக்கொளியில்... அந்த பயங்கரமான முகம்.. —யார்? நடராசனா? ஆமாம் நடராசன் தான்—அவன் கையிலே நாற்றமடிக்கும் தசைக்கூளம்! சோமநாதரின் வாயிலே அதைத் திணிக்க முயன்ற அவன்!!

அந்தக்குடிசைஎரிந்துகொண்டிருந்தது. 'அஞ்சுகம்'. கதறியபடி அவன் ! ஓடிவர முயன்றான். எரிந்துகொண்டிருந்த கூரை அவன் மீது தாழ்ந்ததும்; 'அஞ்சுகம்' மீண்டும் கதறியபடி ஓடிவர முயன்றான். சுற்றிலுமிருந்து கற்கள் பறந்தன; கீழே விழுநதான். உடல் துடித்தது. தூரத்தில் சிரிப்பொலி பிறந்தது. நடராசன் — 'புரூனோ'வானான்.!

தீ தணிந்தது. அணைந்து சூனியமாகிக் கிடந்தது. நடராசனின் குடிசையில் மாத்திரமல்ல; சோமநாதரின் உள்ளத்திலும்! பிணம்போல அமர்ந்திருந்த அவரை போலீஸார்-'அய்யா' எனறனர்.

'ஆ' என்றார்.

'நேற்று உங்கள் மருமகனைக்கொலை செய்த....

" ...."

"கொலை செய்தவனே வந்து ஒப்புக்கொண்டான்! நீங்கள் கொஞ்சம் ஸ்டேஷனுக்கு"

'என்ன' கொலை செய்தவனா!! துள்ளி எழுந்தார் சோமநாதர்.

★

கொலை செய்தவன்—கொலை செய்தவன். நடராசன் இல்லையா?. இல்லை அப்படியென்றால் ?

வேறொருவன்-சோமநாதரின் மருமகன் 'அவன்' மனைவியை - இளம் மனைவியைக் கெடுத்து விட்டானும் - அந்த ஆத்திரம்!,அவனே குற்றத்தை ஒப்புக்கொண்ட பிறகு...!

அப்படி என்றால் நடராசன்

நடராசன் ...

அதோ இழந்துபோன சுவரும் எரிந்து விழுந்த மூங்கில்களும் அவற்றின்மேல் முளைத்திருக்கும் கள்ளிக்கும் காளானுக்கும் எருக்கிற்கும் இடையில் மண்ணோடு மண்ணாக எங்கேனும் - எலும்புத் துண்டங்களாக இருப்பான். தேடிப்பாருங்கள் எத்தனை மழை பெய்தால் என்ன 'அவை' குளிர்ந்தா போகும்? ஒருக்கால் சோமநாதரின் இரத்தம் பட்டால் . . .!

—இசையமுது.

★ ★ ★

கவிஞன் உதயம்

ஒருவர் : எவனும் படித்துக் கவிஞனாவதில்லை ; கவிஞன் பிறக்கிறான்.

மற்றவர் : உண்மை. இதனால்தான் கர்ப்பத் தடை வேண்டுமென்று நான் சொல்கிறேன்.

★ ★ ★

‘சேர்ந்தாரைக் கொல்லி’ புதிய பட்டம்!

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு

வணக்கம். தென்றலை நான் தொடர்ந்து படித்து வருகிறேன். மலைப்பகுதியில் வாழுகிற காரணத்தால் சில வேளைகளில் எனக்குப் பத்திரிகை சரியாகக் கிடைப்பதில்லை. அந்த நேரங்களில் நான் துடித்துப் போவேன். அதுவும் வேலங்குடித் திருவிழாவில் வரும் குணவதி இந்திராவைப் பற்றி அறியாவிட்டால் நான் தினம் தினம் செத்துப் பிழைக்கிறேன்.

நிற்க, சென்ற இதழ் தலையங்கத்தை ஊன்றிப் படித்தேன். நான் எதிர்பார்த்தபடியே வார்த்தைகள் அமைந்திருந்தன. ஆனாலும் ஒரு குறை. மந்திரி சுப்ரமணியத்திற்கு **‘சென்னையன்’** என்ற ஒரு புதிய பட்டத்தைக் கொடுத்திருக்கிறீர்கள். பெயர், காரணத்தோடு அமைந்திருக்கிறது என்று திருப்திப்பட முடியுமே தவிர, சுப்ரமணியத்தின் துரோகபுத்திக்கு, அவர் மனத்தைச் சுடும் வகையில் நம்மால் பட்டப் பெயர் கொடுக்கப்படவேண்டும். அவர் சாகுமட்டும் அந்தப் பெயர்கள் அவருக்குத் துரோக முத்திரையாக நிலைத்து நிற்கவேண்டும். இது எனது தணியாத ஆசை. நான் அவருக்கொரு பட்டப்பெயரைக் கொடுத்திருக்கிறேன். **‘சேர்ந்தாரைக் கொல்லி’** இதுதான் என்னுல் அளிக்கப்படும் ‘திருநாமம்’. சென்னை, சேர்ந்தாரைக் கொல்லி,– இந்த இரண்டு பெயர்களோடு விட்டுவிடக் கூடாது. இன்னும் ஏராளமான பட்டப்பெயர்களை அவருக்குக் கொடுத்து, அவற்றை நமது தென்றல் இதழில் பிரசுரித்து, பத்திரிகையிலேயே ‘பட்டமளிப்பு விழா’ நடத்தவேண்டும். தயவு செய்து இந்தப் பணியைத் ‘தென்றல்’ செய்தல் வேண்டும். சிங்கத் தமிழரையும், சங்கத்தமிழ் இலக்கியத்தையும் பழித்துத் திரியும் இனத்துரோகிகளுக்கு ஒரு பாடம் கற்பிப்போம். உங்கள் எண்ணம் என்ன என்று தெரிவியுங்கள். ‘வணக்கம்.

தி. கைலாசம்,
தேவிகுளம்.

[நண்பர் கைலாசம், கல்வி மந்திரி சுப்ரமணியத்திற்கு ‘சேர்ந்தாரைக் கொல்லி’ என்ற பட்டப் பெயரைக் கொடுத்திருக்கிருர். அதோடு, இன்னும் ஏராளமான பட்டப்பெயர்களைக் கொடுக்கவேண்டும் என்று நம்மைக் கேட்டுக் கொண்டிருக்கிருர். மந்திரி சுப்ரமணியத்திற்கு எத்தனை பட்டப் பெயர்கள் கிடைக்கின்றன என்று அறிய எங்களுக்குக்கூட ஆசைதான். எனவே, நண்பர் கைலாசத்தின் வேண்டுகோளுக்கு இணங்க, தோழர்கள் மந்திரி சுப்ரமணியத்திற்கு என்னென்ன பட்டப்பெயர்கள் வழங்கலாம் என்று 17-4-56ம் தேதிக்குள் ‘தென்றல்’ முகவரிக்கு எழுதியனுப்ப வேண்டுகிருேம். அவைகளைத் தொகுத்து 24-4-56 ம் தேதிய இதழில் பிரசுரிக்க எண்ணம். —ஆ-ர்.]

என். வி. நடராசன்
ஆசிரியர், திராவிடன்

16-99, அம்மன் கோயில் தெரு
சென்னை-1

திருமண அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

வணக்கம். நிகழும் 15-4-1956 (திருவள்ளுவர் ஆண்டு 1987 சித்திரைத் திங்கள் 3ம் நாள்) ஞாயிறு காலை 9-மணிக்கு, சென்னை வண்ணையம்பதி தியாகராயர் கல்லூரிக் கலா மண்டபத்தில், எங்கள் குமாரத்தி, செல்வி ராணிக்கும் திருவாளர் ஞாயிறு. ராசா அவர்களின் குமாரன், செல்வன் கலைச்செழியனுக்கும் திருமணம் நடைபெறும். **அறிஞர் அண்ணு அவர்கள்** தலைமை வகித்துத் திருமணத்தை நடத்திவைப்பார்கள், **நண்பர்கள்** பலர் வாழ்த்துரை வழங்குவர். அதுசமயம் தாங்கள் தங்கள் குடும்பத்துடன் வருகை தந்து மணவிழாவினைச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கோள்கிருேம்.

இங்ஙனம்
என். வி. நடராசன்-புவனேசுவரி

கடிவாள ஜனனம்

காட்டிலே குதிரை தன்னந்தனியே யதேச்சையாகத் திரிந்துகொண்டிருந்தது. எங்கிருந்தோ அங்கே ஒரு கலைமான் வந்து சேர்ந்தது. தான் தனித்து மேய்ந்துகொண்டிருந்த புல்லிலே இப்போது ஒரு கலைமானும் பங்கு கொள்ள வந்தது கண்டு குதிரைக்குச் சகிக்கவில்லை.

அந்தப் பக்கம் வந்த மனிதனிடம் சென்றது குதிரை. “இந்த மானைத் தண்டிக்கிருயா? கொஞ்சம் தயவுசெய்” என்று கேட்டது.

“அதைத் தண்டிக்க என்னுல் எப்படி முடியும்? அது ஓட்டமாய் ஓடி விடுமே! அதைப் பிடித்தால்தானே தண்டிக்கலாம்” என்ருன் மனிதன்.

“என் முதுகில் ஏறிக்கொண்டு அதை வேட்டையாடிப் பிடி” என்றது குதிரை.

“ஐயோ! நான் மாட்டேன். உன் முதுகில் உட்கார்ந்தால், விழுந்துவிடுவேன்” என்ருன் மனிதன்.

“கவலைப்படாதே. என் வாயில் ஒரு கம்பியைப் போட்டுப் பிடித்துக்கொள்” என்றது குதிரை.

அப்படியே குதிரையின் வாயில் ஒரு கம்பியைப் போட்டு, சவாரி செய்து, கலைமானை வேட்டையாடினுன் மனிதன்.

வேட்டை முடிந்ததும், “இனி இறங்கி, என் வாய்க் கம்பியை எடு” என்றது குதிரை.

“முடியாது, முடியாது. நீ மிகவும் உபயோகமான பிராணி. உன்னை விடமாட்டேன்” என்று மனிதன் மறுத்துவிட்டான்.

இப்படியாகக் குதிரைக்குக் கடிவாளம் பிறந்து, ஸ்திரப்பட்டு விட்டது.

—ஈசாப் கதை.

அன்புள்ள ஆசிரியருக்கு

வணக்கம்.

சென்னை நகரில் மக்கள் படும் அவதி கணக்கிலடங்காது. பல பல வழிகளிலும் மக்கள் கஷ்டப்படுகிருர்கள். அவற்றில் ஒன்று பஸ்ஸுக்காக ஏங்கித் தவிப்பது. அரசாங்க பஸ் எதுவும் குறித்த நேரத்தில் வருவதில்லை. அத்துடன் சில பகுதிகளில் ஸ்டாப்பிங் முறையும் சரியாக அமைவதில்லை. நாங்கள் இருக்கும் ஆயிரம் விளக்குப் பகுதியில் வெள்ளாள தேனும்பேட்டை முடிவில் இருக்கும் ஸ்டாப்பிங்கிற்குப் பிறகு ஆயிரம்விளக்கு ஒயிட்ஸ்ரோடில்தான் ஸ்டாப்பிங் இருக்கிறது. இது மக்களுக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. இந்த இரண்டு இடத்துக்கும் இடையில் உள்ள தூரம் சர்க்கார் கணக்குப்படி 4 பர்லாங். இந்த 4 பர்லாங்குக்கு இடையே கான்வெண்ட்டுக்குப் பக்கத்தில் ஒரு ஸ்டாப்பிங் இருந்தால் இந்தப் பக்கத்து மக்களின் அவதி குறையும்.

ஏற்கனவே இந்த இடத்தில் ஒரு ஸ்டாப்பிங் இருந்தது. சென்ற ஆண்டு ஆவடி மாநாட்டின்போது தாற்காலிகமாக அதை எடுத்திருந்தார்கள். பிற்பாடு அதை மறந்தே விட்டார்கள். நண்பர்கள் பலர் இது பற்றி சர்க்கார் போக்குவரத்து இலாகா அதிகாரிக்கு தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் இதுவரை இந்தக் குறை நிவர்த்திக்கப்படவில்லை. நான்கு நாள் ஆவடிக் கூத்து ஒரு வருஷ காலமாக ஏழை எளியவர்களை வாட்டி வதைக்கிறது. மக்களின் அவதியைத் துடைப்பதற்காக, சம்பந்தப்பட்டவர்கள், பழைய ஸ்டாப்பிங்கை மீண்டும் அமுலில் கொண்டு வருவார்களா?

அன்புள்ள,
ச. சண்முகசுந்தரம்,
வெள்ளாள தேனும்பேட்டை.

உள்ளத்தைக் கவரும்
உயரிய நாவல்



காசிப் பார்ப்பனர்-காட்டுக் குறத்தி!

வடநாட்டுச் சீமானின் வேடிக்கை விளையாட்டு!

கவர்னர் பதவி என்பது தேவையில்லாத ஒன்று. அது ஒரு ஆடம்பரச் சின்னம் என்பதைத் தவிர அந்தப் பதவிக்கு அவசியமே இல்லை. கவர்னர் எனப்படுபவருக்கு எந்தவிதமான வேலையும் கிடையாது. மக்கள் வரிப்பணத்தை விரயமாக்கிக் கொண்டு ஊர் ஊராகச் சுற்றி வருகிறார். தவிரவும் நமக்கு வாய்த்திருக்கின்ற கவர்னர் பெருமான் அவர்கள், தன் பதவி, அதன் அந்தஸ்து இவைகள்பற்றித்துளியும்கவலையின்றி, வேதப்பிரச்சார சபைகளிலும், ராமாயண 'உபன்யாசங்களிலும்' கலந்துகொண்டு, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய திராவிடர்களை, குரங்குகள் என்றும், அரக்கர்கள் என்றும், இழித்தும், பழித்தும் எழுதப்பட்டுள்ள வால்மீகி, கம்பராமாயணங்களைப் பற்றி, வானளாவப் புகழ்ந்து பேசி, திராவிடப் பெருங்குடி மக்களின் மனதைப் புண்படுத்துவதுமன்றி, வழக்கில் இல்லாத-செத்த மொழியாம்—சமஸ்கிருதத்திற்கு உயிரூட்டும் வீண் முயற்சிகளில் ஈடுபட்டு, ஆரிய-வர்ணாஸ்ரம-சனாதன இந்து தர்மத்தின் பாதுகாவலராகவும், முக்கியப் பிரச்சாரகராகவும் இருப்பது குறித்து திராவிடரியக்கத்தவராகிய நாம் பல மேடைகளில் பேசியும், பத்திரிகைகளில் எழுதியும், நம் கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறோம். வடநாட்டுச் சுரண்டல் ஏகாதிபத்தியத்தின் 'ஏஜெண்ட்' தான் இந்தக் கவர்னர். ஆண்டொன்றுக்கு (சுமார்) 92 லட்சங்கள். இந்த வேலையில்லாத (அவரே ஒப்புக்கொண்டிருக்கிறார் கவர்னர்களுக்கு, எந்த விதமான அதிகாரமும் வேலையும் இல்லை என்பதை) ஆடம்பரச் சின்னத்திற்கு அழவேண்டியதில்லை. அவருடைய சம்பளத்தைக் குறைக்கவேண்டும் என்பதற்காக ஒரு கிளர்ச்சித் திட்டத்தை அண்மையில் கூடவிருக்கும் இரண்டாவது மாநில மாநாட்டில் தீர்மானிக்கப்படும் என்பதாகவும் தி. மு. கழகம் அறிவித்திருக்கிறது. கி. ஆ. பெ. போன்ற தமிழ் அறிஞர்களின் ஆதரவு மட்டுமின்றி, ராம்மனோஹர் லோகியாவின் தலைமையில் இயங்கும் சோஷலிஸ்ட் கட்சியும் இக்கிளர்ச்சி பற்றி இப்போது யோசிக்கத் தொடங்கியுள்ளது. அந்த அளவுக்கு கவர்னர் பதவியின் அவசியமின்மை பற்றியும், அதற்கெனச்செய்யப்படும் வீண் செலவுகள் பற்றியும் மக்கள் உணர்ந்திருக்கின்றனர். எனினும் இங்குள்ள சில பெரியவர்கள் மட்டும், நம்மீது ஒரு ஏளனப் பார்வையை வீசி, “இதுகளுக்கு வேறு வேலை கிடையாது. கவர்னரைப் பற்றி இவர்களுக்கென்ன தெரியும்? சிறந்த வடமொழி ஆராய்ச்சி வல்லுநர். இலக்கியச் சுவையறிவும், ஹாஸ்ய மனோபாவமும் படைத்த பண்பாளர். இவரைப் போய் வேண்டாமென்கிறார்களே இந்த வேலையற்றவர்கள்! ஆரியத்தின் பாதுகாவலர், வடநாட்டின் ஏஜெண்ட் என்றெல்லாம் திட்டுகிறார்களே நாக்கிலே நரம்பின்றி... உருப்படுவார்களா” என்றெல்லாம் 'சாபம்' கொடுக்கிறார்கள் இந்த யாதும் ஊரே...யாவரும் கேளிர் என்ற பரந்த மனோபாவம் படைத்தவர்கள்.

ஆனால் இவர்களைக் கண்டு ஆத்திரம் ஏற்படுவதற்குப்பதில், அனுதாபமே பிறக்கிறது நமக்கு. நாம் வடநாடு வாழ்கிறது... தென்னாடு தேய்கிறது என்று 'ஐந்தாண்டுத் திட்டக் கண்டன நாள்' கூட்டம் போட்டுப் புள்ளி விவரங்களுடன் எடுத்துச் சொல்லிய போது நம்மைப் பார்த்து, 'தேசத்தைத்துண்டாட விரும்பும் வகுப்புவாதிகள், மொழிவெறியர்கள் மாகாணப் பித்துக் கொண்டோர்' என்றெல்லாம் 'சஹஸ்ரநாமம்' செய்தவர்கள்தான். இப்போதோ சட்ட சபையிலேயே என் கரத்தை வலுப்படுத்தி உதவுங்கள். கனரகத் தொழில்கள், திட்டத்தில் தென்னாட்டுக்கும் தேவை என்று கேளுங்கள், கேளுங்கள்' என்று முகாரி கலந்த பரணி பாடுகிறார்கள் இந்த வந்தபின் காப்போன்கள். இவர்கள் கவர்னர் பதவிபற்றியும் உணரத்தான் போகிறார்கள் ஒரு காலத்தில். நமக்கு நல்ல நம்பிக்கையிருக்கிறது. ஆனால் இவர்கள்...?

வாதப் பிரதிவாதங்கள் எப்படியிருந்தபோதிலும், கவர்னர் பெருமான் மட்டும் தான் ஒரு வடநாட்டுக்காரர் என்பதையும் வர்ணாஸ்ரமப் பாதுகாவலர் என்பதையும் நினைப்பூட்டத் தவறுவதில்லை. அடிக்கடி அவர் தன் உருவத்தைக் காட்டுவதுண்டு. அப்போதெல்லாம் கூர்ந்து கவனிக்கும் ஆற்றல் படைத்த நாம், 'பரந்த மனோபாவம்' படைத்த 'ஏகபாரத'க்காரர்களுக்குச் சுட்டிக் காட்டத் தவறியதில்லை. இதோ மற்றுமொரு நிகழ்ச்சி. நிகழ்ச்சி என்னமோ வேடிக்கையாகத்தான் தோன்றும். ஆனால் சம்பவங்களைக் காரணகாரியத் தொடர்புபடுத்தும் கண்களால் கூர்ந்து கவனியுங்கள் உண்மை உள்ளங்கை நெல்லிக்கனிபோல விளங்கும்.

சில தினங்களுக்கு முன்னால் சென்னை சட்ட சபையினர் 'ஹாஸ்டல் தினம்' கொண்டாடினார்கள். அதில் சட்ட சபை அங்கத்தினர்களும் மதிப்பிற்குரிய மந்திரிமார்களும், மேன்மை தங்கிய கவர்னர் அவர்களும் கலந்துகொண்டு ஓடி, அடித்து, இழுத்து, புரண்டு, குதித்து, கும்மாளமிட்டு ரோஷமான போராட்டம் நடத்தினராம்(இந்த ஒரு வரி என் சரக்கல்ல, சுதேசமித்திரன் எழுத்துக்களின் தொகுப்பு; அவ்வளவுதான்!) அதில்ஒரு 'மாறுவேடப் போட்டி' நிகழ்ச்சியும் இருந்ததாம். பற்பல வேஷங்களில் காட்சி தந்தனராம் உறுப்பினர்களும் அமைச்சர்களும். அப்போது, கூட்டத்திலிருந்த மே. த. கவர்னர் ஸ்ரீ ஸ்ரீபிரகாசா அவர்கள் திடீரென்று காணாமற்போய் மீண்டும் திடீரென்று தோன்றினாராம் மாறுவேடத்தில்! என்ன வேஷமென்கிறீர்கள்! சேரன் செங்குட்டுவன்....தி. மு. க. க்கள் வேஷமல்லவா? ஓஹோ கட்டபொம்மன்... ஊஹூம்... த. க. கூட்டத்தாரின் 'ஹீரோ'வல்லவா? அதையெல்லாமா போடுவார் நமது கவர்னர்? ஆரியமதத்தின் பாதுகாவலர் என்று சும்மாவா சொல்கிறார்கள்? அவரே மெய்ப்பித்தார். போட்டாரே வேஷம்...தின இதழ் ஒன்று வழக்கம்போல அங்கம் அங்கமாக நுணுகி வர்ணிக்கிறது. படியுங்கள். “கையில் குடை, விசிறி இவைகளுடன். பட்டை பட்டையாக விபூதி பூசிக்கொண்டு கையில் தடியுடன் கவர்னர்...” வந்தாராம். பாருங்களேன் கவர்னர் பெருமான் தேர்ந்தெடுத்த வேஷத்தை! அவர் என்ன செய்வார் மனத்தின் பிரதிபலிப்புத்தானே செயல்! அவர் பார்ப்பனர் வேஷம் போட்டார் என்பதைப் படிக்கும்போதே இங்குள்ள பூணூல் திருமேனிகள் 'பேஷ் பேஷ்' என்கின்றன பூரிப்போடு! ஆனால் திரு. பிரகாசா அவர்கள் சாமான்யமானவரல்ல! அவர் இவர்களையும் ஏமாற்றிவிட்டு தாம் ஒரு வடநாட்டுக்காரர் என்பதை நினைவூட்டுகிறார்! ஒரே கல்லில் இரண்டு மாங்காய்! எப்படி? அவர் போட்டது தென்னாட்டுப் பார்ப்பனர் வேஷமல்லவாம். (இதில்கூடவா வடநாடு-தென்னாடு என்று முணகலாம் சிலர்! என்ன செய்வது! உண்மை...?) வடநாட்டு 'காசி பிராமணர்' வேஷம்தான் போட்டாராம்!

“ஐயா தி. மு. க., கவர்னர் காசிபிராமண வேஷம்போட்டது பிரமாதமாக ஏதோ கண்டு பிடித்துவிட்டதைப்போலக் குத்திக் குதிக் காட்டுகிறாயே, அவர் அந்த வேஷத்தில் ஒரு புரட்சி செய்திருக்கிறாரே! அதுவும் பத்திரிகையில் வந்திருக்கிறதே! அது மட்டும் ஏனய்யா உன் கண்ணில் படவில்லை” என்று சிலர் கேட்கக்கூடும்.

ஆமாம் திரு. பழனியாண்டி அவர்கள் அந்த விழாவில் நரிக் குறத்தி வேஷம் போட்டார்களாம். அந்த நரிக்குறத்தியைக் கண்டதும் நம் கவர்னர் பெருமானுக்கு 'தீராக்காதல்' ஏற்பட்டு உடனே கல்யாணமும் 'செய்துகொண்டாராம்.'

“இந்த நிகழ்ச்சி எதைக்காட்டுகிறது. உயர்ந்த சாதிக்காரன் தாழ்ந்த சாதிப் பெண்களைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்ளவேண்டும்! அப்போதுதான் சாதி ஒழியும் என்று காசிப் பிராமணர் - காட்டுக்குறத்தி கடிமண - நிகழ்ச்சியின்மூலம் கவர்னர் பெருமானவர்கள், தமக்கே உரித்தான ஹாஸ்ய பாணியில், நைசாக, வாழைப் பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல 'அரியதொரு கருத்தை உணர்த்தியிருக்கிறாரே தெரியுமோ' என்று பெருமை பேசுபவர்களுக்கு என் குறும்புத் தம்பி கூறும் பதில் என்ன தெரியுமோ! இதோ தருகிறேன்!

பார்ப்பனர் வேஷத்தை ரசித்த அளவுக்குக் குறத்தியின் திருமணத்தை - கலப்பு மணத்தை- பார்ப்பனர்கள் இதன்மூலம் ஆதரிக்கமாட்டார்கள் என்பதை காசிபிராம்மண வேஷம் பற்றி எழுதிய 'சுதேசமித்திரன்' குறத்தி திருமணம் பற்றிக் குறிப்பிடவேயில்லை என்பதனால் தெரிந்துகொள்ளலாம். இன்னொன்று கவர்னர் கலப்புமணம் பற்றியல்ல கல்யாணம் செய்துகொண்டது. அவருடைய பழக்கத்தை யொட்டிய நிகழ்ச்சிகளில் அதுவுமொன்று. கவர்னர் அவர்கள் எந்த இடத்தில் எந்தப் பொருள் பற்றிப் பேச நேர்ந்தாலும், பொருத்தமோ பொருத்தமல்லவோ, பெண்களைப் பற்றிப் பேசாமலிருப்பதில்லை. பெண்கள் பற்றியும் அவர்கள் அழகை வர்ணிப்பதிலும் அவருக்கு அலாதிப் பிரியம்! எனவேதான் காசிப் பிராமணர் வேஷத்திலிருந்த அவர் காட்டுக் குறத்தியைக் கண்டதும் ஓடோடிச் சென்று கடிமணம் புரிந்துகொண்டுவிட்டார். அவ்வளவுதான்? எல்லாம் பழக்க தோஷம்!”

தம்பி சொல்வதைக் கேட்டீர்களா? உங்கள் அபிப்பிராயம் என்ன? யோசித்து வையுங்கள்! எவர் அபிப்ராயம் எப்படியிருந்தாலும் முதற்பரிசு எந்த வேஷத்திற்குத் தெரியுமோ பார்ப்பனர் வேஷத்திற்குத்தான்! அவர்களுக்கு எப்போதுமே யோகம் தான்!

—திருவாரூரான்.

மே 17, 18, 19, 20 தேதிகளில்
தி. மு. கழக இரண்டாவது மாநில மாநாடு
திருச்சியில் நடைபெறும்.

வேலங்குடித் திருவிழா

கண்ணதாசன்

23

உள்ளே என்ன நடக்கிறதென்பதை அறிய இந்திராவால் முடியவில்லை. ஆனால் கமலம் உள்ளேதான் இருக்கிறாள் என்பது மட்டும் அவளுக்குப் புரிந்துவிட்டது.

"விடுங்கள்! அக்காள் கூப்பிடுகிறாள்! அக்காள் கூப்பிடுகிறாள். விடுங்கள்!" என்ற பெண் குரல் கமலத்தின் குரல்தான்!-இந்திராவின் தலை சுழன்றது. படபடவெனக் கதவைத் தட்டினாள். கதவு திறக்கப்பட்டது. பலவந்தமாக பாலனிடமிருந்து விடுபட்டு ஓடிவந்து தாழைத் திறந்தாள் கமலம்! இந்திரா பயந்த நிலையில் அவளைப் பார்த்தாள். கமலம் அலங்கோலமாக நின்றாள். அவள் மேனி நடுங்கிக்கொண்டிருந்தது. இந்திரா அவளை அணைத்தவாறு அறைக்குள்ளேயே சென்று கதவைத் தாழிட்டுக் கொண்டாள். வெளியார் யாரும் பார்த்துவிடக்கூடாதே என்ற பயம்தான் அவளுக்கு. பாலன் ஒருபுறமாகத் திரும்பிச் சாய்ந்து கொண்டிருந்தான்.

"இது நியாயந்தானா? யாருக்கும் தெரிந்தால் என்ன ஆவது? ஏன் இந்த அவசரம்!" இந்திரா பாலனிடம் முதன் முறையாக, கடிய குரல் காட்டினாள். பாலன் பேசவில்லை. குற்றவாளி அவன்! கோழையானான்!

"கொஞ்சம் பொறுத்தால் என்ன கெட்டுப்போய் விட்டது! எவ்வளவு தூரம் இளகிக் கொடுக்கிறேன். நீங்களும் கொஞ்சம் ஆர அமர எதையும் செய்யக் கூடாதா? கமலம் உங்களுக்குத்தான் என்று உறுதியாகவே கூறிவிட்டேன்! என் இடத்தை முற்றிலும் அவளுக்குத் தரத் துணிந்துவிட்டேன். கழுத்திலே ஒரு பொட்டுத்தாலி ஏறுவதற்குள் அப்படி என்ன பசி? யாராவது பார்த்திருந்தால் மானம் மரியாதை என்ன ஆவது? கெட்டதற்குப் பிறகு, திருமணம் முடிந்தாக்கூட ஊரிலே என்ன சொல்வார்கள்? 'கெட்டுப்போய் விட்டாள். வேறு வழியில்லை. அவனுக்கே கட்டிக் கொடுத்துவிட்டார்கள்' என்றுதானே சொல்வார்கள்! அதுதான் பெருமையா?"—இந்திரா படபடவென்ப் பொழிந்தாள். தங்கையைத் திரும்பிப் பார்த்தாள். மேலாடை கிழிந்து அவள் நின்ற கோலம் இந்திராவை வேக வைத்தது. கமலம் சுவற்றில் முகம்புதைத்து நின்றாள்.

"எல்லாம் உன்னால்தானே வந்தது! எதற் கெடுத்தாலும் என்னையே அனுப்பினாய்! அவரைத் திருப்தி செய்ய வேண்டுமென்ற உன் ஆசைக்கு என்னைப் பலியிடத் துணிந்தாய். மானம் போகும் நிலைக்கு வந்து நிற்கிறது, உன் தியாகச் செயல்! வேறொருவரை மணந்து நான் நன்றாக வாழ்வேனே! இந்தக் காமாந்தகாரனுக்கு என்னைக் கட்டிவிட நீதானே முடிவு செய்தாய்! உனக்காகத் தானே இணங்கினேன். தண்ணீர் கேட்டார்; கொடுக்க வந்தேன். தாழிட்டுவிட்டார் கதவை! சத்தம் போடுவேனா? போட்டால் மானம் என்ன ஆவது? பிறகு உன் முடிவுதான் என்ன ஆவது? அதற்காக மெதுவாகவே மறுத்தேன்; திமிறினேன்! நீ மட்டும் வராமலிருந்திருந்தால், என் முதலிரவு பலாத்காரமாகவே நடந்திருக்கும்! பாரடி என் கோலத்தை!" என்று கமலம் சொல்லவில்லை; ஆனால், அவ்வளவு புகைந்தது அவள் மனதில். வயிற்றுப் பசி எடுத்தவன் பிணம்-மலம் என்று பார்ப்பதில்லை. உடற்பசி எடுத்தவன் தாய்-சேய் என்று பார்ப்பதில்லை.

இந்திரா, கமலத்தின் தலையைக் கோதிக் கொடுத்தாள். "என்ன செய்தீர்கள்?" என்று கேட்டாள், பாலனைப் பார்த்து! என்ன கேட்பதென்று புரியாமல் இப்படிக் கேட்டு வைத்தாள் அந்த அப்பாவிப் பெண்! கமலத்தின் கன்னத்தில் பல இடங்களில் அழுத்தமாகப் பல் பதிந்த தழும்பு காட்சியளித்தது; அழகான புதிய பெண்ணோடு காதல் புரியும்போதுதான் மனிதன் அசல் நாயாகிறான். பாலன் பேசாமலே இருந்தான். உடனே இந்திரா, கமலத்தைப் பார்த்து, "நில் கண்ணு. புதிய ரவிக்கை எடுத்து வருகிறேன். அதுவரை கதவைத் திறக்காதே!" என்று கூறிவிட்டு, பாலனையும் பார்த்து "நீங்கள் நன்றாயிருப்பீர்கள். கொஞ்ச நாள் பொறுங்கள். அதுவரைக்கும் நீங்கள் வெளியே எங்காவது சென்றுவர் ஆசைப்பட்டாலும் சென்று வாருங்கள். இங்கே ரசாபாசம் வேண்டாம்" என்று கூறிவிட்டுக் கதவைத் திறந்து, வெளியேறிச் சாத்திக் கொண்டு கீழே இறங்கினாள். இப்போது கமலமும் பாலனும் தனித்திருந்தார்கள். பாலன் மறுபடியும் அவளருகில் வந்து எட்டிப் பார்த்தான். கமலம் சடக்கென அவன் தூல்களில் வீழ்ந்து கால்களைக் கட்டிப் பிடித்துக் கொண்டு, "என்னைக் கெடுத்துவிடாதீர்கள்! இன்னும் நீங்கள் இது மாதிரி நடந்தால் நான் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று கூறிவிட்டு எழுந்து சுவற்றருகில் நின்று கொண்டாள். பாலன் சாமியாடியோல் வேர்த்து விறுவிறுத்து உட்கார்ந்தான்.

இந்திரா ஒரு புதிய ரவிக்கையோடும் சேலையோடும் மேலே வந்தாள். கமலத்திடம் கொடுத்து மாற்றிக் கட்டிக்கொள்ளச்சொன்னாள். கமலமும் அந்த அறைக்குள்ளேயே மறைவாகக் கதவருகில் சென்று சேலை மாற்றிக் கொண்டு ரவிக்கையையும் மாற்றினாள். அதை ஒரு காகிதத்தில் சுற்றி எடுத்துக் கொண்டாள் இந்திரா. இருவரும் பூனைகள் போல் மாடிப் படிகளில் இறங்கினார்கள். பாலன், பெரு மூச்சு விட்டுத் திரும்பிப் படுத்தான்.

மனிதன் வர்ணம் மாற்றும் பச்சோந்தி! தினசரி மனிதனது நிறம் மாறுகிறது; குணம் மாறுகிறது. காலையிலிருந்த புத்தி, மாலையிலிருப்பதில்லை. ஏன் இருப்பதில்லை என்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க முடிவதில்லை. பாலன் ரோஷக்காரனாக இருந்தான், நான்கு நாட்களுக்கு முன்பு. அந்த ரோஷம் எப்படிப் பட்டது என்கிற அடிப்படையையே மறந்துவிட்டான் இன்று. அரிப்பெடுக்கும் உள்ளம், தினவெடுக்கும் உடல், படபடவென எழும் உணர்ச்சி, இவை மனிதனது கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டவை என்ற வாழ்க்கை இலக்கண விதிக்கு இலக்கியமாகத் திகழ்ந்தான், பாலன்!

கீழே இறங்கிய இந்திராவும் கமலமும் ஒன்றுமே நடக்காதது போல நடந்துகொள்ள முயன்றார்கள். நடிப்புக் கற்றுக்கொண்டார்கள். சிரித்தார்கள்; திருமணக் கலகலப்பில் முழுப்பங்கு கொண்டு, அமைதியடையத் தொடங்கிய வீட்டில் தாங்களும் துயில ஆரம்பித்தார்கள்.

தனி அறையில் விடப்பட்ட சுந்தரமும் சாரதையும் முதல் இரவின் முதல் அனுபவத்தில் பூரித்திருந்தார்கள். தலை திருப்பி நின்று ஓரக் கண்ணால் சாரதை பார்க்கவும், அப்படிப் பார்க்கிறாள் என்பதிலே சுந்தரம் பெருமைப்படவும், கைதொடவும், கன்னி சிலிர்க்கவும், நாணத்தால் முகம் சிவக்கவும், "சிவந்த முகம் செந்தாமரையோ" எனச் சொல்லாமல் சுந்தரம் சிரிக்கவும் மல்லிகைப் பூவின் 'சில்'லென்ற மணம் அவனைக் கொல்லவும் பதினாறு ஆண்டுகள் ஈடேதோஷணை நிலைக்கு ஆட்பட்ட மேனி எப்படிச் சிலைபோலவே இருக்கிறது என்று ஆச்சரியப்பட்டுக் கூர்ந்து கவனிக்கவும், அவள் அதிலே மகிழவும், 'படா'ரென்று அவளைப் படுக்கையில் தள்ளி, "பேச மாட்டாயா?" என்று சுந்தரம் கேட்கவும், "ஊஹூம்!" என்று அவள் ஊமை வேடம் போடவும் சிருங்கார ரசத்தின் சாரம் முழுவதும் அங்கே அணு அணுவாக ரசிக்கப்பட்டது!

சாரதை புதியவள் - சுந்தரம் புதியவன்! புதியவர்களின் முதற் காதல் புனிதமானது. பிரம்மச்சரியத்திலேயே பல அனுபவங்களைப் பெற்று, பிறகு மணம் புரிகிறவன் மனைவியை ரசிக்க முடியாது. புதிது! புதிது! அதுவே காதலில் பெரிது! புதிய காதலில் உடற்பசி சீக்கிரம் எழுவதில்லை. ஒரு மணி நேரத்திற்குமேல் உதடுகளே காதல் உலகின் எல்லையாக நிற்கின்றன. உடம்பின் மற்ற தோற்றங்கள், படிப்படியாக விளங்க ஆரம்பிக்கின்றன. சுகம், வெகு நேரம் கதையாகவே நீடிக்கிறது. "உலகம் இப்படியே இருக்கவேண்டும்! என்றும் இளமை! என்றும் புதுமை! இதுவே வாழ்வின் தினசரிப் பாடமாக அமையவேண்டும்" என்றெல்லாம் ஆசை எழுகிறது. ஆனால் அனுபவப்பட்டவனின் முதலிரவு, உடற் பசியிலேயே தொடங்கிவிடுகிறது!—சுந்தரம் நல்ல வேளையாக

வைராக்கிய பிரம்மச்சாரியாக வாழ்ந்திருந்தான். ஆகவே, அழகுச் சிலையான சாரதையை அவனால் வெகுவாக ரசிக்க முடிந்தது. அவளுடைய குரலிலே அது வரை அவன் வாழ்ந்து வந்த உலகம் பாடாத இசை தட்டுப் பட்டது. கலைந்திருந்த அவனது தலையை அவள் சரிப்படுத்திய போது சுந்தரத்தின் இதயம், கருணைத் தெய்வத்தின் கரங்களுக்குள் கட்டுப்பட்டுக் கிடந்தது. தாயின் அன்பு இதயம் தாரத்திடம் காணப்படும்போது உலகம்தான் எவ்வளவு இனிமையாக இருக்கிறது! வயது வந்த மனிதன் குழந்தையாவது மனைவியின் மடியில்தான். பயிலும் மொழியும் மழலையாகவே பிறப்பதும் அப்போது தான்! சுந்தரம் குழந்தையானான். சாரதை தாயானாள். தாய், குழந்தையைக் கொஞ்சினாள். அதிலே சாறு பிழிந்த காதல் மலர்ந்தது! முத்தங்கள் காவியம் எழுதின. தாங்கள் மட்டுமே உலகத்தில் மிச்சமிருப்பதாகக் கருதி அவர்கள் வாழ்க்கை இன்பத்தை ரசித்தார்கள். பொழுது விடிந்தது, அவர்களது விழித்த கண்களுக்கு எதிரே! ஏன் விடிந்தது பொழுது! இன்னும் நீட்டிக்கக் கூடாதா என்று ஏங்கினார்கள், தம்பதிகள். என்ன செய்வது! இரவு போனால் பகல்-பகலுக்கு வேறு கடமை! இது இயற்கையின் விதி! சுந்தரமும் சாரதையும் விடிந்த பொழுதுக்கு இணங்கிக் கொடுத்து விலகி வெளியேறினார்கள்!

வெளியில் வந்த சாரதைக்கு வேடிக்கை காத்திருந்தது. முகத்தைக் கூர்ந்து கவனித்து, "பல் பட்டிருக்கிறது!" என்றாள் ஒருத்தி. பக்கத்தில் நின்ற கமலத்தின் நெஞ்சு 'துட்'டென்றது. உதடு வெளுத்திருக்கிறது என்றாள் ஒருத்தி. அவள் கலிங்கத்துப் பரணி படித்தவள்போலிருக்கிறது.

"தூக்கமே இல்லையா, துப்புரவாக?" என்று, ஆவலோடு கேட்டாள் ஒரு ஆரணங்கு. தன் கணவன் தூங்காததை அப்பொழுது நினைத்துக்கொண்டாள், ஆறு பிள்ளைகள் பெற்ற அவள்! சாரதை, இரவு பெற்ற இன்பத்திற்குமேல் அதிகமாக இதை ரசித்தாள். நாம் மகிழ்ந்ததை மற்றவர்கள் ஒப்புக்கொண்டு, பொறுமைப்பட்டால் கூட, நமக்கு மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

மடமடவென மங்கையர்க்கரசி அங்கே வந்தாள். சாரதையின் கையைப் பிடித்துக்கொண்டு, கூட நின்ற பெண்களைக் கோபமாகப் பார்த்துவிட்டு, "வாம்மா குளிக்க!" என்று இழுத்துக் கொண்டு போனாள். பெண்கள் சிரித்தனர். ஆனால் அங்கே நின்ற கமலம் சிரிக்கவில்லை; சிந்தனை உலகில் பறந்தாள். அப்படியே அருகிலிருந்த தூணில் சாய்ந்தாள். அப்பொழுதுதான் மாடியிலிருந்து கீழே இறங்கிவந்தான், பாலன்!- கமலம் வேறுபுறம் திரும்பி நடந்தாள்.

இந்திரா, இப்பொழுது தீவிரமான சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். தாய் தந்தையரிடம் திருமணப் பேச்சை எப்படி ஆரம்பிப்பது என்று விளங்காமல் தவித்தாள். உடனே சம்மதிப்பார்களா? அல்லது, "உனக்காக அவனையும் பலியிட முடியாது!" என்று கூறிவிடுவார்களா? - அவளுக்குப் புரியவில்லை. இந்தக் கேள்விக்கு விடையைச் சரியாக-தெளிவாக-திட்டவட்டமாகக் கண்டுபிடிக்காமல், பாலனுக்கு வாக்குக் கொடுத்துவிட்டதற்காக, அவள் இப்போது தன்னையே நொந்து கொண்டாள்.

பாலனுக்கு அன்று முழுவதும் இருக்கை கொள்ளவில்லை! கமலத்தை சும்மா பார்த்துக் கொண்டே இருந்து திருப்தி அடைய அவன் தயாராயில்லை. மற்றப்படிக்கட்டுகளில் இறங்கக் கமலம் தயாராயில்லை. ஆகவே,

தான் சென்னைக்குப் போய் விடப் போவதாக மீண்டும் மிரட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தான். இந்திராவை, மாடிக்கு அழைத்தான். அவளும் உடனே ஓடிவந்தாள்.

"நான் இன்றிரவு சென்னைக்குப் புறப்படுகிறேன்" என்றான்.

"ஏன்?"-இது இந்திரா!

"வேலையிருக்கிறது!"

"நான்கு நாட்களுக்கு அந்த வேலையை ஒத்திபோடக் கூடாதா!"

"இல்லை நான் போயாக வேண்டும்."

"ஏன் இப்படி அடிக்கடி மாறுகிறீர்கள்!"

"அதைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருக்க நேரமில்லை."

"என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்! திருமணத்திற்கு முன்னால், எதுவும் நடப்பது நன்றாக இருக்குமா?"

"நான் அதற்காக ஒன்றும் போகவில்லை. கமலத்தைத் திருமணம் செய்துகொள்வது மட்டுமே என் வாழ்க்கையின் லட்சியமல்ல!"

-ஒரு லட்சியமுமில்லாத தன்னலக்காரனும் தனக்கு உயர்ந்ததோர் லட்சியமிருப்பதாக முரசறைவதிலே பெருமைப்படுகிறான்! - பாலனும் அதில் பெருமைப்பட்டுப் பேசினான்.

"இப்பொழுது என்ன வேண்டும் உங்களுக்கு! கமலம்தானே! வரச்சொல்கிறேன்! எப்படியோ நடந்துகொள்ளுங்கள்! எங்கள் இரண்டு பேருடைய பிணத்தையும் சேர்ந்தாற்போல் பார்த்தாவது, பிறகு திருப்தி அடையுங்கள்!"-இந்திரா படபடவெனப் பேசினாள். அவள் உதடு துடித்தது. நெஞ்சு விம்மித் தாழ்ந்தது. கண்கள் குளமாயின. "ஏன் இன்னும் வாழ்ந்து தொலைக்கிறேன்! சாவு வரக்கூடாதா!" என்று தனக்குத் தானே பேசிக் கொண்டாள். நிலம் பார்த்தபடி வேதனைப் பிம்பமாக நின்றாள்.

"அதெல்லாம் பேசாதே! எனக்குக் கமலமும் தேவையில்லை. நீயும் தேவையில்லை. நான் நினைத்தால் எவ்வளவோ!"-என்றான் பாலன். அவன் பேச்சிலே 'திமிர்' நிறைந்து நின்றது. ஆண்களின் வாழ்க்கைக்கு வரம்பே இல்லை! இது அவர்களுக்கு எவ்வளவு வசதியாக இருக்கிறது! எத்தனை பெண்களின் கண்ணீருக்குக் கடினமாகிவிடுகிறது! நினைத்ததைப் பெறவேண்டும் என்பதிலே ஆடவனுக்கிருக்கிற பிடிவாதம், பெண்களுக்கு இருப்பதானால், உலகில் குடும்ப வாழ்வே இருக்காது! பெண்களின் தியாக உணர்ச்சிதான் குடும்ப வாழ்வைக் கட்டிக்காத்து வருகிறது.

பாலன் அவள் கண்ணெதிரே மூட்டைகட்ட ஆரம்பித்தான். இந்திரா கண்ணீரோடு, அவன் கால்களிலே விழுந்தாள்.

"அத்தான்! உங்களைக் கும்பிடுகிறேன். எப்படியோ, இன்னும் கொஞ்சநாளில் சாகவேண்டிய என்னை, இப்பொழுதே கொன்று விடாதீர்கள்! நீங்கள் எதைக் கேட்டு நான் மறுத்தேன்! அத்தான்! இது நம் குடும்ப கவுரவத்தைப் பொறுத்த விஷயம்! மானம்! மானம்! இல்லையேல் வாழ்ந்து என்ன பிரயோசனம்! அத்தான்! என்னை மன்னித்து விடுங்கள்! நான்கு நாட்களில் சென்னைக்குத் திரும்பி விடுவோம். வேண்டுமானால், கமலத்தையும் அழைத்துக் கொண்டு வருகிறேன். நான் சொல்வதைக் கேளுங்கள்! குஷ்டரோகம் பிடித்த பிச்சைக்காரிக்குக் காசு போடுவீர்களே! எனக்கு இந்தக் கருணை காட்டுங்கள்! உங்களுக்காகத் தானே இன்னும் உயிரோடிருக்கிறேன்! ஏன் அதை நினைக்கமாட்டேனென்கிறீர்கள்! அப்பா அம்மாவிடம் கேட்பதற்குக் கொஞ்சம் பயமாயிருக்கிறது! எப்படியும் கேட்டு முடித்துவிடுவேன். பிறகு நீங்கள் இருவரும் எங்கேயாவது சென்று சில மாதங்கள் இன்பமாக இருந்துவிட்டு வரலாம். நான் உங்கள் சந்தோஷத்திற்குக் குறுக்கே நிற்கமாட்டேன் அத்தான்! போகாதீர்கள்! ஊர் சிரிக்கும்! என்னமோ ஏதோ என்று பேசும். ஒன்றைப் பத்தாக்கும். கதை கட்டும். ஏற்கனவே நலிந்த உள்ளம் - அத்தான்! உங்கள் பாதங்களைக் கண்ணீரால் கழுவுகிறேன். போகாதீர்கள்!"-என்று கதறினாள் இந்திரா. பாலன் மனம் இளகுவதாயில்லை. சபல சித்தம் கொண்ட நெஞ்சுகூட, காம நினைவில் கல்லாகிறது!

"என் கால்களைவிடு! உன் கண்ணீர் என்னைப் பலமுறை கரைத்திருக்கிறது. இப்போது நான் ஒரு முடிவுக்கே வந்துவிட்டேன். சென்னையில் போய் தனியாகவே வாழப்போகிறேன்......" - பாலன் முடிக்கவில்லை. இந்திரா எழுந்தாள். மாம்பழம் அறுப்பதற்காக வைக்கப்பட்டிருந்த ஒரு கத்தியை எடுத்தாள். இவ்வளவு நேரமும், அறைக்கு வெளியில் நின்று கண்ணீரோடு இதைக் கவனித்த கமலம், "அக்கா!" என்று அலறினாள்!

முகப்பு

தாய்க்குலத்து எழுச்சிப் படையின் முன்னணி வீராங்கனை-பெண்ணடிமை கொண்டு வாழும் வல்லரக்கர் உள்ளங்களை வகைப்படுத்தக் கிளம்பிட்ட சேவகி-புதுமணம், புரட்சிக்கருத்து தாயகத்தில் நிறைந்திருக்க வேண்டுமெனத் துடித்து நிற்கும் தோழியர் அலமேலு அப்பாதுரை அவர்களின் படம் இந்த இதழ்த் 'தென்றல்' முகப்பை அலங்கரித்திருக்கிறது.

அலமேலு அப்பாதுரை அவர்கள், சிறைச்சாலையை, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலையாக்கிக் கொண்டு பலமுறை சிறை சென்றிருக்கிறார்கள். 'களம்புகுவீர்' என்று, கட்சி கட்டளை இட்டபோதெல்லாம் 'நான் முந்தி' என்று களம்புகுந்து காராக்கிரக வாழ்வை மேற்கொண்டிருக்கிறார்கள். இயக்கத்தின் வளர்ச்சிக்கு இடையறாது உழைப்பதிலே பேரார்வம் கொண்டவர்கள். அடிமைப்பட்டிருக்கும் திராவிடத்திற்கு அலமேலு அப்பாதுரை போன்றாரின் தொண்டு மிக மிகத் தேவை!

வளர்க அவர்தம் தொண்டு!

சிலம்பு வழங்கும் செல்வம்

இராசன்

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம். ஏ., எல். டி.

கடல், கடற்கழி, குட்டை:—

தமிழ்ப் புலவர், கலைஞர், அறிஞர்களின் பரப்பில் புறக்கணிப்புக் குழுவினரும், தூற்றுதல் குழுவினரும் சேர்ந்து ஒருங்கே வகிக்கும் இடம் மிகமிகச் சிறிதே ஆகும். தமிழ் ஆராய்ச்சித் துறை ஒரு கடலானால், புறக்கணிப்புக் குழு கடல் அலைகளிலிருந்து ஒதுங்கிக் கிடக்கும் ஒரு கடற்கழி போன்றது. தூற்றுதல் குழுவோ கடல், கடற்கழி ஆகிய இரண்டிலிருந்தும் துண்டுபட்டுக் கிடக்கும் ஒரு வடி நீர் குட்டை. மறு மலர்ச்சியின் எழுச்சியால் கடல் ஆரவாரிக்கும் இந்த நாட்களில், அந்த ஆரவாரம் சென்று எட்டாத திட்டுக்களே இவைகள் ஆயினும் இந்த நிலையிலும் சிலப்பதிகாரத்தின் வரலாற்றுப் பெருமை. கலைப் பெருமை, இலக்கியச் சிறப்பு, தமிழ்த் தேசிய பண்பாட்டுப் பெருமை, இந்திய மாநிலமளாவிய, கீழ்த்திசையளாவிய உலகளாவிய அதன் கலை வரலாற்றுப் பெருமை, இசைநாடக முத்தமிழ் பெருமை ஆகியவை உலகிலோ தமிழகத்திலோ பொது மக்களிடையே ஒரு சிறிதும் பரவிவிடவில்லை. அறிஞர் உலகில் கூட அது போதிய அளவு உணரப்படவில்லை. அத்துடன் புறக்கணிப்புக் குழுவும் தூற்றுதல் குழுவும் அறிஞர் உலகிலோ பொது மக்களிடையிலோ செல்வாக்கற்றவையே. ஆனாலும், இரு வேறு வகையில் வருங்காலத் தமிழகத்துக்கும் வருங்கால உலகத்துக்கும் தெரிந்தும், தெரியாமலும், குந்தகம் விளைவிக்கும் போக்குகளே உடையவையாயிருக்கின்றன.

மறுப்புக்குரிய மூன்று காரணங்கள்:—

புறக்கணிப்புக் குழு பல்கலைக் கழகங்கள், கல்வி, நிலையங்கள், அரசியல். அரங்கங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றின் ஆட்சிக் குழுவினரை மறைந்து நின்று இயக்கும் ஆற்றல் படைத்ததாகவே இருந்து வருகிறது. ஏற்கனவே அது தமிழகத்தின் மெய்ம்மைகளும், மெய்ப்புகழும் உலகுக்குத் தெரிய வராமல் மறைக்கும் சீரிய பணியை திறம்படச் செய்து வருகிறது. தமிழர் வரிப் பணத்தைப் பயன்படுத்தித் தமிழர் கல்வியின்மை. அறியாமை. மடமைகளை முதலீடாக வைத்து அயல் பண்பாடுகளை உணர்த்தி வருகிறது. சிலப்பதிகாரத்தின் மெய்ப் பெருமையை மறைத்தாலன்றி இந்த அயல் பண்பாட்சியை நீடித்துப் பேண முடியாது என்பதை அது கண்டு கொண்டுள்ளது, கண்டு கொண்டு வருகிறது. நோக்கத்தில் தூற்றுதல் குழு புறக்கணிப்புக் குழுவுக்கு நேர்மாறானதே. ஆனால் அது கலைப் பண்பற்றது. பொது மக்கள் உள்ளத்திலே அயல்பண்புகளையும்கலைப்பண்புகளையும் பிரித்தறிய மாட்டாமல் ஒன்றுபடுத்திக் குழப்பி தெரிந்தும் தெரியாமலும் அயல் பண்புகளை வளர்த்துத் தமிழ்ப் பண்பின் எதிரிகளிடமே மக்கள் உள்ளத்தை ஒப்படைத்து விடக் காரணமாகியுள்ளது.

மேற்கூறிய மூன்று காரணங்களும் இல்லை என்றால், சிலப்பதிகாரத்தின் எதிர்ப்புக்கு மறுப்புக் கூற வேண்டிய தேவையே ஏற்பட்டிராது. இதைஅவர்களும் அறிவர். ஏனெனில் இதுவரை இந்த இரு சாராருக்கும் ஆட்சிக் குழுவிலும், மக்கள் மன்றத்திலும் பதவிகள் கிடைத்தனவே ஒழிய, தமிழ்பற்றிப் பேசும் உரிமையும் கிடைத்ததில்லை; அவர்கள் பேசியதை எவரும் கேட்கவோ, மறுப்புக் கூறவோ எண்ணியதுமில்லை. ஆனால் பொருந்தாத் தலைகளே பொருத்த முயன்ற பேராசிரியர் அத்தகைய எதிர்ப்பைக் கிளற ஒரு சிறு சூழ்ச்சியைக்கையாண்டுள்ளார். தமிழகத்தின் கலைஞரிடையே முன்னணி வரிசையில் இடம் பெற்ற கண்ணதாசன் மீது பின்னிருந்து கல்லெறிவதன் மூலம் கலைஞர் உலகில் கவனத்தை அவர் தம் திசையிலும் தமிழ்த் துறையாளரால் கவனிக்கப்படாதிருந்த பெரியார்கள் பக்கமும் திருப்பும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியுள்ளது.

சிலப்பதிகாரம் பற்றிப் பொது மக்களிடையே-சிறப்பாகதமிழ்ப் பணியுடன், தமிழினப் பணியும் தமிழ்ப் பண்பாடு வளர்க்கும் பணியும் மேற்கொண்ட மறுமலர்ச்சி இயக்கத் தோழர்களிடையே—புதிய எண்ண அலைகளைப் பரப்ப இச்சந்தர்ப்பம் பயன்பட்டுள்ளதாதலால். அவர் தூண்டிய மறுப்பே சிலம்பு தூண்டும் தமிழகச் சிறப்பை வளர்க்கவும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது எனலாம்.

★ ★ ★

அம்பில் பொல்லாதவர் !

"மே. 17, 18, 19, 20 ஆகிய நாட்களில், திருச்சியில் நடைபெறும் நமது மாநில் மாநாடு. உன்னையும் என்னையும்' உன்னதமான அறப்போர் வீரர்களாக ஆக்குவதற்கான பாடிவீடு என்று கூடச் சொல்லலாம். நம்மையெல்லாம் வரவேற்று உபசரித்திட வகைவகையான எண்ணங்களைக் குவித்துக் கொண்டிருக்கிறார், வரவேற்புத் தலைவர், அம்பில் தர்மலிங்கம். பொல்லாத மனிதர், என்னை எதிரில் வைத்துக்கொண்டே சென்னையில் நடைபெற்ற மாநில மாநாட்டை விட, எங்கள் திருச்சி மாநாடு, பன்மடங்கு கவர்ச்சியுள்ளதாக, எழுச்சி மிக்கதாக, பயன்தரத்தக்கதாக அமையப் போகிறது என்று கூறுகிறார். நானும், அதை மறுப்பதற்கில்லை, உண்மையை மறைத்திடும் திறமையை நான் எங்கே பெற்றிருக்கிறேன்!"

—அறிஞர் அண்ணா,
1-4-56 திராவிட நாடு.

★ ★ ★

காவிரித் தாயின் கவர்ச்சியைத் தோழர் துரை. மாணிக்கம் எளிய முறையில் காட்சியாக்கிக் காட்டியிருக்கிறார். கங்கை பல்லுயிரை மாய்க்கிறது. காவிரி பல்லுயிரையும் வளர்க்கிறது. கங்கைக்கும் காவிரிக்கும் உள்ள இந்த வேறுபாட்டை எளிய முறையில் எடுத்தியம்புகிறது இக்கவிதை.

காவிரித் தாய் !

— துரை-மாணிக்கம் —

பூவிரித்தாய்; வண்ணப் பொழில்விரித்தாய்; தென்னைத்தேன்
மாவிரித்தாய்; வாழைப் பலாவிரித்தாய்-நாவரிக்கப்
பாவிரித்தேன் பண்டைப் புகழ்பாடும் வண்டினஞ்சூழ்
காவித்தாய் காவிரித்தாய் என்று.

நீர்பெருக்கிப் பச்சை நிலம்பெருக்கி 'அச்சா'கும்
ஏர்பெருக்கி நெல்லோ டுயிர்பெருக்கி—ஊர்பெருக்கிப்
பார்பெருக்கிப் பண்டைப் புலவரெலாம் பாப்பெருக்கப்
பேர்பெருக்கிக் கொண்டாய் பெரிது

கெண்டை புரளக் கிளர்ந்தெழுந்த நெற்பயிரைக்
கொண்டை மலர்மூடிக் கொண்டிருக்கும்—பெண்டிரெலாம்
வாரிச் சுருட்டுகையில் "வாழ்வீர் தமிழரெ"ன்று
நீரிற் சுருட்டுவையோர் பாட்டு.

நீர்க்குவளை சேர்ந்துவரும் நெற்பயிரோ டின்னெலிசெய்
தார்குவளைப் பெண்டிர் அகமகிழ—கார்குழுமிப்
பாடல்செய் தேத்துமுன்றன் பக்கலுள்ள மஞ்ஞையினம்
ஆடல்செய் தேத்துமுன் அன்பு

கன்னல் அளித்தும் கனியளித்தும் வான்தோயும்
தென்னை அளித்துந் தேன்கதலி —தன்னோடே
உன்னை அளித்தும் உயிரளித்தும் வந்தாய் நீ
என்னை அளியோ விது

கிளிகொஞ்சும்; வெள்ளைக் கிடைநாரை துஞ்சும்;
அளிகெஞ்சும்; அம்மலர்த்தேன் சிந்தும்—இளிசேர்கண்
மந்தி மரம்பாயும்; மன்னுதமிழ்த் தொல்பெருமை
குந்திக் குயில்கூவுங் கோடு.

மேடுகளை நீக்கி மிகத்தாழ் நிலன்நோக்கி
ஓடுவதேன்? உன்றன் உளச்சிறப்பைப்—பாடுவன்கேள் !
மேலைக் குடியென்போர் மேவாரோ ? மேவுவரோ
ஓலைக் குடிலோர் உனக்கு ?

காப்பதுபோற் காட்டிப்பின் கங்கையோ பல்லுயிரை
மாய்ப்பதுபோ லல்லாமல் மக்கள்வளம்—பூப்பதிலுன்
வெள்ளப் பெருக்கை விரிக்கின்றாய்; உன்பெருமை
உள்ளப் பெருக்கிற்கோர் ஊற்று

ஊர்வளமை காட்டும் உயர்மதுரை; நாகரிகச்
சீர்வளமை காட்டும் செறிநூல்கள்—நேரில்லாப்
போர்வலிமை காட்டும் பொருதோள்கள்; இந்நாட்டின்
நீர்வளமை காட்டுவைநீ நின்று

வான்வறக்கு மென்றாலும் வண்மையிலே மேன்மேலுந்
தான்சுரக்குந் தண்டமிழ்த்தாய்க் காவிரியே —தேன்சுரக்கும்
செந்தமிழின் நன்னாட்டுச் சீரே ; செழிக்கவைக்க
வந்தமர்ந்த வேலையே வாழ்த்து.

கழகச் செய்திகள்

★ 8-4-56 காலை ஒன்பதுமணி யளவில் தீச்சுடர் நிதிக்காகச் சென்னை கோகலே ஹாலில் சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு, திரு. கண்ணதாசன், திரு. டி. கே. சீனிவாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்கள். கட்டணம் அணா 8.

★ திருவல்லிக்கேணி, கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தின் சார்பில் 'அமுது' என்னும் கையெழுத்துப் பிரதியின் துவக்க விழா 8-4-56 அன்று மாலை 5 மணிக்கு நடைபெறும். திரு. நீலநாராயணன் அவர்கள் தலைமையில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை அவர்கள் துவக்கி வைப்பார்கள். தோழர்கள் மா. பா. சாரதி, இளம்பரிதி, எம். கே. மணி, நெல்லை கபிலன் முதலியோர் சொற்பொழிவாற்றுவர்.

★ 10-4-56 இரவு 10 மணிக்கு திருப்புத்தூர் கருணாநிதி படிப்பக நிதிக்காக எஸ். எஸ். ராஜேந்திரன் குழுவினர் நடிக்கும் 'மணி மகுடம்' நாடகம் நடைபெறும். சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு அதுபோது சொற்பொழிவாற்றுவார்.

★ பணகுடி திராவிடமுன்னேற்றக் கழக படிப்பகச் சார்பாக 12-4-56 வியாழன் இரவு 7 மணிக்கு ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். நாஞ்சில் மாவட்ட தி. மு. க. செயலாளர். வி. எம். ஜான் அவர்கள் தலைமையில் நாஞ்சில் கி. மனோகரன் பி. ஏ. ஆனர்ஸ், தஞ்சை டி. கே. சீனிவாசன் ஆகியோர் பேசுவார்கள்.

★ 20-4-56 இரவு 10 மணிக்கு திருக்கோஷ்டியூர் அண்ணா நாடக மன்றச் சார்பில் கலைஞர் மு. கருணாநிதி தீட்டிய 'நச்சுக்கோப்பை' நாடகம் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். வாசன், எஸ். எஸ். அருணன், எஸ். ஆதிமூலம், வைரகிருஷ்ணன், எஸ். டி. ஞானம், சந்தனக்குமார், எம். சீனிவாசன், எஸ். சீனிவாசன், என். சண்முகம், சேகர், கே. முத்துவயிறு, கே. மாதவன், எஸ். பி. கருப்பையா, தோழியர் கே. ஆர். கிருஷ்ணவேணி முதலியோர் பங்கேற்கின்றனர்.

வரலாற்றில் யானைகள்...

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

மார்க்கமாய்ச் செல்லும் தேவதைகள் தானே என்று தோன்றும்."

யானைகளைப் பரிசாக வழங்குவதை அந்த நாளில் பெரிய ராஜ மரியாதையாக மதித்தார்கள். ஆயினும் அந்தப் பரிசு சில சமயம் உண்மையில் ஒரு தண்டனை ஆகிவிடும். குர்ரம் என்ற ராஜகுமாரனை ராணா அமர்சிங் என்பவன் பேட்டி காணச் சென்றபோது, குர்ரம் அவனை ராஜ மரியாதைகளுடன் வரவேற்று யானை, குதிரை, கத்தி முதலியவைகளைப் பரிசாக வழங்கி அனுப்பினான். ஜகத்சிங் என்பவனுக்கு ஜஹாங்கிரும் இப்படியே பரிசுகள் வழங்கினானாம். ஆயினும் ஓர் அரசனை நாசம் செய்யவேண்டுமானால், அவனுக்கு ஒரு வெள்ளை யானையைப் பரிசாக அளித்தால் போதும் என்றும் முன்காலத்தில் மதித்தார்கள். சியாம் தேசத்து அரசன் தன் சபையில் யாரையாவது தரித்திரனாக்க விரும்பினால், அவனுக்கு ஒரு வெள்ளை யானையைத்தான் பரிசளிப்பது வழக்கமாம். அரசன் அளித்த பரிசை வேண்டாம் என்று ஒருவன் எப்படி மறுப்பான்? அந்த யானையைக் கட்டித் தீனி போடுவதிலேயே அவனுடைய ஆஸ்தி முழுவதும் செலவழிந்துவிடும்.

மொகல் மன்னர் யானைமீது வீற்றிருந்து பொன்னையும் வெள்ளியையும் ஜனங்களுக்கு வாரி வாரி வழங்கிக்கொண்டு ஊரைச் சுற்றி வருவார்களாம். அதில் அவர்களுக்கு அலாதியான சந்தோஷம். ஜஹாங்கீர் பட்டத்துக்கு வந்த ஒன்பதாவது வருஷம் ராணா அமர் சிங்கின் 'ஆலம் கோமன்' என்ற பிரசித்தமான யானையை இளவரசன் பிடித்துக்கொண்டு வந்து தன் தந்தைக்குப் பரிசளித்தானாம். மறுநாளே அந்த யானையின்மேல் ஜஹாங்கீர் சந்தோஷத்துடன் ஏறி உட்கார்ந்துகொண்டு எல்லோருக்கும் தங்கத்தை அள்ளி வீசினானாம். இதை ஜஹாங்கீரே குறிப்பு ஒன்றில் எழுதியிருக்கிறான்.

மொகல் ராஜ்யத்தில் யானைகளே பெரிய பீரங்கிகளை இழுத்துச் செல்வது வழக்கம். இப்போதும் இந்திய சமஸ்தானங்களில் இந்த வழக்கத்தைக் காணலாம். 1608-ம் வருஷம் மகபத்கானின் தலைமையில் ராணா அமர்சிங்குக்கு எதிராகப் போர் புரியும் பொருட்டு ஜஹாங்கிர் அனுப்பிய படையில் ஆயிரக் கணக்கான குதிரை வீரர்களும் யானைகள்மீது ஏற்றிய எண்பது பெரிய பீரங்கிகளும் இருந்தன.

சாதாரண காலத்தில் யானைகளைச் சண்டைக்கு விட்டு வேடிக்கை பார்ப்பதிலும் அரசர்களுக்கு விசேஷ உற்சாகம் இருந்தது. சில சமயம் இந்தச் சண்டை மகா குரூரமாய்ப் போய்விடும். யானைப் பாகர்களே யானைகளின் காலடியில் அகப்பட்டு நசுங்கிச் செத்துவிடுவார்கள். வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கும் ஜனங்களில்கூட யாராவது சிலரை யானைகள் தம் கால்களின் கீழ்த்தள்ளி மிதித்துக் கொன்றுவிடும். சண்டை போடும் யானைகளைக் கண்டு ஜனங்கள் பயந்து சில சமயம் நாலு பக்கமும் ஓடும்போது இடிபட்டுச் சாவோரும் உண்டு.

அக்பர் சக்கரவர்த்திக்கு யானைகளுடன் விளையாடுவது பெரிதும் பிடிக்கும். அவர் காபூலில் இருந்தபோது அவரிடம் நாய், குதிரை, ஒட்டகம் முதலியவை இருந்தன. இந்தியாவுக்கு வந்த பிறகு யானை அவர் மனத்தை மிகவும் கவர்ந்து விட்டது. துஷ்ட யானை ஒன்று தன் பாகனைக் கொன்று எல்லாருக்கும் திகிலை உண்டாக்கும். அப்போது அக்பர் சிரித்த முகத்துடன் அதன் தந்தத்தின்மீது காலை வைத்து முதுகில் ஏறி உட்கார்ந்துகொண்டு மற்றொரு துஷ்ட யானையுடன் அதைச் சண்டைக்கு விடுவார். பாதிச் சண்டை நடக்கும்போது மற்ற யானையின் பாகன் அதை அடக்க முடியாமல் தவிப்பதைப் பார்த்தும், அக்பர் தம் யானையிலிருந்து அந்த யானையின்மீது தாவி உட்கார்ந்துகொள்வார். அக்பருடைய இத்தகைய லாகவத்தையும் சாமர்த்தியத்தையும் பற்றி அபுல் பஸல் வர்ணித்திருக்கிறார். எப்படிப்பட்ட முரட்டு யானையையும் தம் தந்தை (அக்பர்) அடக்கிவிடுவார் என்று ஜஹாங்கீரும் சொல்லியிருக்கிறார்.

2,000 வருஷங்களுக்கு முன் காபூல், பஞ்சாப் ஆகிய பிரதேசங்களை மெனண்டர் என்ற ஒரு பிரபல அரசன் ஆண்டுவந்தான். யானைகளை மலையிலிருந்து உருட்டித் தள்ளிக் கொன்றுவிடுவதில் அவனுக்கு மிகவும் பிரியமாம்.

முன் காலத்தில் குற்றம் செய்தவனை வதைத்துத் தண்டிப்பதற்கும் யானைகளை உபயோகித்தார்கள். யானையின் காலால் இடறச் செய்து கொல்லுவதுதான் சாதாரணமாய் விதிக்கும் மரண தண்டனை. சிரச்சேதம் செய்வது, தூக்கிலிடுவது போன்ற தண்டனைகளைத் தவிர, குற்றவாளியை யானை முன் எறிவதும் விஜயநகர மன்னர்களின் வழக்கம். யானை அந்த மனிதனைத் தன் தந்தங்களால் குத்திக் கிழித்துப் போட்டுவிடும். தயாள குணமுள்ளவன் என்று பெயர் பெற்ற ஜஹாங்கீர்கூட இந்தக் குரூரமான தண்டனையை விதித்திருக்கிறான். அடங்காத கோபம் வந்துவிட்டால் ஒரு மனிதனை உயிரோடு தோலுரித்து விடவோ, யானையின் முன் எறிந்துவிடவோ அவன் கட்டளையிடுவானாம்.

இந்தக் காலத்திலும் யானைகள் ஏதாவது ஒருவிதத்தில் பிரசித்தி பெற்று வருகின்றன. சினிமாவில் பிரபலம் அடைந்த 'காலநாகம்' என்ற யானையைப் பற்றிச் சினிமா ரசிகர்களுக்கெல்லாம் தெரிந்திருக்கும். அமெரிக்காவில் 1936-ம் ஆண்டு ஜனாதிபதியின் தேர்தலின் போது 'சூசன்னா' என்ற யானை தன் துதிக்கையில் ஓர் உண்டியல் பெட்டியுடன் ஊரெல்லாம் சுற்றுப் பிரயாணம் செய்ததாம். இன்றுங்கூட ஏதோ ஒரு விதத்தில் உலகப் பிரசித்தமான காரியங்களைச் செய்வதற்கு யானைகளை நன்றாய்ப் பழக்க முடியும் என்றே தோன்றுகிறது.

'ஓரியன்ட்'

அழகு வாலிபன்-'அவதார' புருஷன்!

படுக்கையில் படுத்துப் புரளும் அந்த இளைஞனுக்குத் தூக்கம் வர மறுத்துவிட்டது. அவன் எண்ணங்களுக்கிடையே புரண்டான். முட்களுக்கிடையே மனிதனால் புரளமுடியுமா? முடியாது! ஆனால் எண்ண முட்களுக்கிடையே அவனால் புரள முடியும்! அதிலே சிறிது வலி இருந்தாலும்—வேதனையே ஏற்படுவதில்லை! இன்பமும் துன்பமும் சூழ்நிலைக்குத் தகுந்தபடி ஏற்படுவதுதான் நியதி.

அந்த வாலிபன் விழிகளை இறுக மூடிக்கொண்டான். அறையின் கதவுகளைச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டு விட்டான். விளக்குகளை அணைத்து விட்டான். இருந்தும் நித்திரா நங்கை அவனை மருவ மறுத்து விட்டாள். அவன் இதயக் கதவுகள் மூடப்படவில்லை — திறந்து கொண்டுதானிருந்தன. உணர்ச்சிச் சுடர் உள்ளத்தில் ஒளியை உமிழ்ந்தபடிதானிருந்தது. மனக் கண்கள் மூடப்படாமல் விழித்துப் பார்த்துக் கொண்டிருந்தன.

தென்றலில் சிலுசிலுக்கும் சேலையின் சலசலப்பு; மலரின் நறுமணம்; காலணியின் கலகலப்பு; கைவளையின் சிணுங்கல். அவ்வாலிபனின் இதயத்தைத் தூங்காமல் பாதுகாத்த காரியங்கள் இவைகள்! மனக் கண்கள் சுற்றுமுற்றும் நோக்கின. எழில் ததும்பும் மாதொருத்தி எதிரே ஒயிலாக நின்றிருந்தாள். உயிரைக் கொல்லும் சிரிப்பை உதட்டிலிருந்து உதிர்த்தாள். உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் விழிவீச்சை வீசினாள். பாவம்! அந்த இளைஞனின் இதயம் தடுமாறியது.

கூந்தல் சரிந்து சரிந்து அவிழ்ந்தது. அவள் அதை இலேசாகக் கோதி வாரி முடித்தாள். தென்றலின் வருகை — திரும்பவும் அவளின் கூந்தல் சரிந்தது. கூந்தல் சரிவிலேதான் எத்தனை அழகு! ரம்மியம்! அப்பப்பா. அவனால் அதை விவரிக்கவே முடியவில்லை. அதைக் காணும்தோறும் அவன் இதயமும் சோருகிறது.

அவள் மார்பு விம்முகிறது. மனம் படும் இன்பத்தை எடுத்துக் காட்ட அவள் நெஞ்சம் தணிகிறது. அந்த விம்மலிலும் தணிவிலும்தான் அவன் எத்தனை இன்பங் காண்கிறான்! அடடா, அதை எப்படித்தான் எடுத்துச் சொல்வான்? அதைக் காண்பதால் அவன் இதயமும் விம்முகிறது, தணிகிறது.

மந்தமாருதம் வீசுகிறது. அவள் அத்தென்றலிலே நீந்துகிறாள்; அசைகிறாள். அவன் நெஞ்சமும் அசைகிறது; ஆடுகிறது. தென்றலின் மிருதுவைக் கூடத் தாங்கமுடியாமல் அவள் இடை தளர்கிறது-துவள்கிறது. அவள் அதுபோது அழகின் தேவதையாகக் காண்கிறாள். அதைக் கண்டதும் அவன் உள்ளமும் ஒசிகின்றது. அவள் இடையைப் போன்றே அவன் இதயமும் தளர்கிறது—துவள்கிறது.

அவள் நெளிகிறாள்—அவன் நெஞ்சமும் நெளிகிறது. அவள் அசைவுகள் அத்தனையும் அவன் மனதை அசைக்கின்றன-ஆட்டுவிக்கின்றன! பாவம், என் செய்வான்? தன் காதலியை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்று துடிக்கிறான். அவளின் உருவெளித் தோற்றம்தான் இப்படியென்றால்-அவன் மனம் வேறெங்கோ செல்கிறது.

நந்திவர்மனின் தலைநகராம் காஞ்சிநகர் மங்கையர்களில் ஒருத்தி அவன் காதலி. அவன் நெஞ்சை நோக்குகிறான். "ஏ, மனமே! நீ எனக்கல்லவா துணையாக இருக்க வேண்டும்? அதோடு அந்தப் பெண்ணோடு சேர்ந்துகொண்டு ஆடுகிறாயே! அவள் அசைகிறபடியெல்லாம் அசைகிறாய்; சரிகிறாய்; சிரிக்கிறாய், விம்முகிறாய்; தணிகிறாய்! இதெல்லாம் என்ன கோலம்? இதென்ன சோதனையா, வேதனையா? என் இனிய நெஞ்சே! நீயே என்னைக் கைவிட்டுப் போகும்போது-எனக்கு வேறு துணையேது? உன்னையன்றி வேறென்ன வேண்டும் எனக்கு? அட மட நெஞ்சே!" என்றெல்லாம் அன்போடு சாடுகிறான் தன் நெஞ்சை.

அந்த இளைஞனின் இதய தாகம்தான் என்ன? அதில் தான் எத்தனை இனிய வேதனை! நந்திக்கலம்பகப் பாடலாசிரியரின் பாடல்களில் ஒன்றினை ஏதுவாகக் கொண்டதுதான்—இக் காட்சி. இதோ அப்புலவரின் பாடல்:

"கோதை கோரில்
சோர்கின்றாய்
கொங்கை விம்மில்
விம்முகின்றாய்
ஊதை அசைய அசைகின்ற
மருங்குல் ஒசிய ஒசிகின்றாய்
காதும் நெடுவேற் படைநந்தி
கண்டன் கச்சி வளநாட்டு
மாதர் இவரோ (டு) ஒன்றானாய்
மற்றென் வேண்டும்
மட நெஞ்சே!"

★

மிதிலைமாநகரின் நீண்ட வீதிகளில் இராமனின் நெடிய உலா நடைபெற்றது. உலாவரும் சமயம் சீதை நெடிய மாடியிலிருந்து இராமனைக் கண்டாள்—களிகொண்டாள். கார்மேக அண்ணலும் அக்கட்டழகியைக் கண்டனன்—களிப்பெய்தினன். இருவர் நயனங்களும் சந்தித்தன. இருவர் அழகும் அவர்களிடையே பரிமாறிற்று. உலா, வீதியைக் கடந்துவிட்டது. சீதை இராமனையே பார்த்து நினைத்திருந்தாள்! இராமனும் சீதாவையே எண்ணிச் சென்றான். இராமனின் நினைவுகளில் சீதையின் பேரழகு பிரகாசித்தது. உலா முடிந்து இராமன் தன்னிருப்பிடம் சேர்ந்தான். கதிரவனின் ஒளிக்கதிர்கள் ஒளிமங்கி இருண்டுபோயின. எங்கும் இருளின் அந்தகாரம் மூடியது.

இராமன் துயில்கொள்ள அமளிக்குச் சென்றான். தூக்கம் வந்தால்தானே! படுக்கையில் படுத்துப் படுத்துப் புரண்டான். கண்களை இறுக மூடி நித்திரையைப் பலவந்தமாக வரவழைத்தான். தூக்கம் ஒரேயடியாக வரவே மறுத்து விட்டது. எண்ணங்களில் தகிக்கும் மோகம் அவன் தூக்கத்தைச் சாகடித்தது.

சீதையின் எழிலுருவம் அவன் மனதில் தோற்றியது. அந்த அழகு மேனியை அப்படியே அரவணைத்துக் கொள்ள வேண்டும் என்ற பேராசை அவனைத் தூண்டியது. நிழலுருவான அவள் தோற்றத்தை என் செய்வது? நினைவுகள் சீதையின் சீதளமேனியைத் தடவலாயின. எண்ணங்கள் சீதையின் அங்கங்களை அப்படி அப்படியே ஆராய்ந்து அறிந்துகொண்டன. உள்ளத்து உணர்ச்சிகள் எழுந்து பம்மாத்துச் செய்தன. பாவம், இராமன் தனக்குத் தானே பேசிக் கொள்ளலானான். ஆண்டவனின் அவதாரமான இராமன் தன்னையும் மறந்து, சீதையின் உடல் போதையில் திளைத்துப் போனான். அவளது மேனிச் சுளிவு நெளிவுகள் அவன் மனதை மயக்கிவிட்டன.

"ஆ! ஆ! என் நினைவில் என்றும் மயங்காமல் மறையாமல் இருக்கும் கன்னியாகிய அக் கூற்றுவனுக்கு, என்னைக் கொல்ல எத்தனை ஆயுதங்கள் வேண்டியிருக்கின்றன? சீதா நீ என் உயிரைக் கொள்ளை கொள்ள எத்தனை வகையான ஆயுதங்களை வைத்திருக்கிறாய்? அப்பப்பா, அவைகளை நினைக்கும் போதே என் மெய் சிலிர்க்கிறது. அடுத்த ஆயுதம்—அந்த இறுமாந்திருக்கும் தனங்கள்! அதற்கும் அடுத்த ஆயுதம்—வெடிக்கும் சிரிப்பு! அணுவையும் துளைத்து அண்டத்தையும் கலக்குமே உன் உதட்டுச்சிரிப்பு! கடைசி ஆயுதம்-அதை எப்படிச் சொல்வேன்? ஆமாம், அந்த அற்புத ஆயுதம் என்னதெரியுமா? சொல்கிறேன்! அழகிய மேகலையை அணிந்த தேர்த்தட்டுப் போன்ற-அந்த அல்குல்தான்! அதுவேதான்...! சீதா! இத்தனை ஆயுதங்களையும் பிரயோகித்து என்னைக் கொல்லாமல் கொல்லுகிறாயே!" இங்ஙனமெல்லாம் சீதையை எண்ணி ஏங்கி-அவளின் உருவெளித்தோற்றத்தைக் கண்டு இராமன் புலம்புகிறான். பாவம், பரமனின் மறுபிறவிக்கே எத்தனை மோக வெறி? எத்தனை காமவேதனை? சரதாரண மனிதன் பெண்ணைப் பற்றி நினைக்காத அளவுக்கு ஆண்டவனின் அவதாரம் எண்ணுகிறது. சீதையின் மறைவிடங்களையெல்லாம் எண்ணி எண்ணி ஏங்குகிறது, மனிதனுக்கு இல்லாத காமவெறி இராமபிரானுக்கிருக்கிறது!

நந்திக்கலம்பக இளைஞனைக் கண்டிருப்பீர்கள். அவனும் இராமனைப்போன்றுதான் காதல் மயக்கத்தோடு இருக்கிறான். என்றாலும் அவன் எண்ணியதிலே ஒருவித இனிய வேதனையும், ஆசையும்—தன் நெஞ்சையே வாஞ்சையாகக் கொஞ்சிக் கண்டிக்கும் திறனும்—யாரும் கண்டு வியத்தற்குரியதாம்! அவன் நினைவிலே தமிழகத்துப் பண்பாடு தெற்றெனத் தெரிகிறது. 'மற்றென் வேண்டும் மடநெஞ்சே' என்று மனதைக் கேட்கும் தோரணை—அவனது காதற் பண்பாட்டை விளக்குகிறது.

ஆனால் இராமன் நினைக்கும் தன்மை! கம்பர் வாயாலேயே கேளுங்கள். 'மேகலை தேரொன்று, கதிமுலைதாமிரண்டு, நகையொன்று—எண்ணுங் கூற்றினுக்கு இத்தனை வேண்டுமோ?' எனும் சொற்றொடர்கள் சொல்லும் பொருள்தான் புரியுமே — உங்கட்கு! கலம்பகக் கவியையும்—கம்பர் பாடலையும் காணுங்கள்! கடவுளர்க்கும்—சாதாரண மனிதனுக்கும் உள்ள தாரதம்மியத்தை அறிந்து கொள்ளுங்கள். இதோ கம்பரின் கடவுள்—இராமன்!

"வண்ண மேகலை தேரொன்று
வாளெடுங்
கண்ணி ரண்டு கதிமுலை
தாமிரண்டு
உன்னி வந்த நகையுமென்
றொன்றுண்டால்
எண்ணுங் கூற்றினுக் இத்தனை
வேண்டுமோ?"

—"எழில்"

பந்தாட்டம் பார்த்த மகாராஜா!

ஐ. நா. சபையில் ஒரு சமயம் நிகழ்ச்சி முறைபற்றிப் பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடந்தன, அதைக் கண்டு சகிக்காமல் ஸர், பெனகல் நரசிங்க ராவ் இந்தக் கதையைச் சொன்னார்:

"ஓர் இந்திய ராஜா இருந்தார். அவரைக் கால் பந்தாட்டம் ஒன்றைப் பார்க்க அழைத்துச் சென்றார்கள். அந்த ஆட்டத்தில் ஜயமடைந்த கட்சியாருக்கு ஆளுக்கு ஒரு கால்பந்தை அடுத்த நாள் அந்த ராஜா இனாமாக அனுப்பினார். அதோடு, ஒரே, ஒரு பந்துக்காக நீங்கள் பதினோரு பேரும் அப்படிச் சண்டை போட்டது எனக்குப் பிடிக்கவில்லை. அதனாலேயே இவைகளை அனுப்பினேன்' என்று தெரிவித்தார்,

"ஆனால், இங்கே இருக்கிறோமே பதினோரு பேர், நம் எல்லாருக்கும் ஒரு சமயத்தில் ஒரு பந்து போதும் என்றே நான் நினைக்கிறேன். அதாவது, ஒரு சமயத்தில் ஒரே ஒரு தீர்மானத்தைப்பற்றி மட்டும் விவாதிப்போம்,

'ஸேயிண்ட் லூயி போஸ்ட்—டிஸ்பாட்ச்'

26. சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள் !

வெண்பாப் போட்டி 26ன் பரிசு பெற்ற வெண்பாவையும் பிரசுரத்திற்குத் தகுதியுள்ள வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

★ பிஞ்சுப் பருவத்தில் பெற்றோரைத் தீண்டியதோள்
வஞ்சியரைத் தோயுந்தோள் வாலிபத்தில்-கொஞ்சுமக்கள்
மாட்சியுற ஆடுந்தோள் போர்க்களத்தில் மாற்றார்செய்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ச. இராமசமி, கயற்கண்ணிபுரம்

★

பண்டிதரின் சூழ்ச்சியிலே பாங்காய் முளைத்தெழுந்த
மண்டிலத் துப்பிரிவில் மண்ணடிக்க-எண்டிசையும்
தாழ்ச்சி, தளர் வற்றுவளர் "சர்வகட்சிக் கூட்டணியே"
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்
—எம். சுப்பையா, நாரைக்கிணறு.

★

திண்தோளன் அண்ணா திருவிடத்தின் நற்சொத்து;
குன்றனைய மார்பாளன; கொள்கைக்கோன்-தென்னகத்தில்
வாழக் குடிபுகுந்த வஞ்சகரை வீழ்த்துமவன்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்
—மா. பாஸ்கரன், பரமக்குடி.

★

முல்லைக் கொடியனையாள் முத்தத்தை ஏற்குந்தோள்
வில்லதனை யும்ஏற்கும் வீரத்தோள்-தொல்லுலகில்
தாழ்ச்சி யினையறியாத் தண்டமிழன் தன்தோளே
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—கண்ணம்மா, உடுமலை.

★

"பொறுமை; எளிமை" என்று பொய்ம்மதத்தின் போரால்
வறியார்க்கு நீதி வகுத்தே-உரிமையொடும்
வாழ்வார் சிலரென்னில் ஆர்த்தெழுக; மற்றந்தச்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
— உ. மீனாட்சிசுந்தரம், அருப்புக்கோட்டை.

★

கைதுடிக்க வாய்துடிக்கக் கண்கள் இமைதுடிக்கப்
பொய்துடிக்கும் ஆட்சிசெத்துப் போய்த்துடிக்கும்
-மெய்துடிக்க
வீழ்ச்சிகளை வீழ்த்தி விசைபெற்று நாமெழுந்தால்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—பொன்னிவளவன், பாவநாசம்.

★

கொல்பசியைப் போக்கக் கொடுக்கின்ற கூலியிலும்
செல்லாத காசுகளைச் சேர்க்கின்றார்!-தொல்லுலகில்
வாழ்வதுபொய் என்றேய்த்து வாழ்ந்துவரும் வஞ்சகரின்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—சி. பி. சாமி, திருப்பத்தூர்.

★

மாக்காதற் செல்வத்தின் மாண்புறு தோள்குறித்துப்
பாக்கிருக்கும் வாயாள் பகர்கின்றாள்-சேக்கையிலே
வீழ்ச்சி யறியாத்தோள் வெல்ல நினைக்குமென்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—சி. சிவராமலிங்கம், சென்னை-1.

★

சிலைகாண் வளைதல் சிறுத்தை பதுங்கல்
விளையாட்டுக் கல்லவடா தம்பி!-உளைவேனோ?
வீழ்ச்சியுற்றார் போல்நடிப்போம் வேளைஎதிர் நோக்கிடுமெம்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—பனை. சண்முகம், நெற்குப்பை.

கைவேல் தனையே களிற்றெறி்துபோக்கிப்பின்
மெய்வேல் பறிப்போர்முன் மீண்டோர்யார்? வையத்தில்
தாழ்ச்சி வருமேல் தமிழுக்கு வஞ்சகர்தம்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ஆ. கோவிந்தராசன், குடந்தை.

★

மல்லர் கடந்த மறத்தமிழன் வாழ்நாட்டில்
எல்லாம் வடவர் எடுபிடியா?-சொல்லொணாத்
தாழ்ச்சி தமிழகத்தில் தாராதீர்; தாழாது
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ப. கணபதி, சோழபுரம்.

★

ஆவியுடல் போயழிய அல்லல்பல வந்தாலும்
தேவிகுளம் பீர்மேடு தென்பகுதி-மேவிட்வே
தாழ்ச்சியுரை பேசும் தறுதலைகள் செய்கின்ற
சூழ்ச்சிகளைந் தூளாக்கும் தோள்.
—பி. எம். சுப்ரமண்யன், பெரியகுளம்.

★

கங்கை, கடாரமென வென்ற கழல்மறவர்
மங்கை குழாம்சூழ மார்தட்டிப்-பொங்கியெழின்
வீழ்ச்சியுறும் வீணர்தோள்; காட்சியுறும் காப்பியத்தில்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்,
—மங்கை, இளசை.

★

'உழைப்போர்க்(கு)உரிமை'யெனில் 'பின்னர் உரிமை;
உழைப்பே தலைக்கடமை' என்று-விளைகாலம்
தாழ்த்திடும் மூளையரைத் தாக்க எழுகவவர்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ம. இராமகிருட்டிணன், அருப்புக்கோட்டை.

★

நாட்டின் நலங்காக்க நம்தமிழர் கண்டமைத்த
கூட்டணியில் நின்று குலுங்குமதோள்-கேட்டினுக்கே
காழ்ச்சிந்தை கொண்டுள்ள காமரா சர்நேரு
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ஆ. அழகன், புதுச்சேரி.

★

வெற்பெடுக்கும்; வேல்சுமக்கும்; வேய்ங்குழற்சொல்
காதலியின்
நற்கொங்கை பாரம் நயந்தேற்கும்-நற்றமிழர்
வீழ்ச்சியின்றி வெற்றியுற வெங்குருதி சிந்திடுமே
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்
—து. க. சண்முகம், கம்பை நல்லூர்.

★

செந்தமிழர் வீரம் சிறிதே பழித்துரைத்தார்
சொந்தார் தலைநோகக் கல்லெடுத்தார்-நந்தோள்கள்
வீழ்ச்சிதனைக் காணாது வீணே எதிர்ப்போரின்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—சு. சுடலையாண்டி, கன்னியாகுமரி.

★

வேதவகை சாதிமத நீதிவகை விண்ணிறைவர்
பேதவகை ஓதுவதேன் பேதமையீர்-பூதலத்தின்
தாழ்ச்சிகளைப் போக்கஅண்ணா சாற்றுரையைப்
போற்றிநிற்கி
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—ச. நல்லகுமாரு, ஒட்டன்சத்திரம்.

★

செந்தமிழன் சீர்குலையச் செப்பும் வடமொழியால்
வெந்தழலை ஊட்டலினி வேண்டாங்காண்-மந்தமதி
வீழ்ச்சிகளை வென்றோம் விழித்தெழுந்தோம் பெற்றோம்உ
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—அ. மு. அ. பாண்டியன், சாலையூர்.

★

ஒன்றுபட்ட இந்தியத்தைத் துண்டுபட உன்னுவதேன்?
என்றுரைத்தே ஏய்க்கவின்னும் எண்ணுகின்றீர்-
நன்றிகெட்
பாழ்ச்சுரண்டல் இன்னுமேன்? பைந்தமிழர் பெற்றார்உ
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—இராமையா, இடையகோட்டை

★

செந்தமிழ் நாட்டின் சிறுபாக மொவ்வொன்றும்
சொந்தமன்றோ? நம்மவர்க்குத் தோகையே-வந்திட்ட
வீழ்ச்சிகளை நேர்நின்று வீரமுடன் போர்தொடுப்போம்
சூழ்ச்சிகளைத் தூளாக்கும் தோள்.
—மு. ப. சங்கரலிங்கம், வடுகபாளையம்

★ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6.